பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 25 வியாழக்கிழமை (10.09.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 288

# 'யுனிசெவ்' அதிகாரியை வெளியேற்றும் முடிவுக்கு ஐ.நா. செயலாளர் கண்டனம்

## இலங்கையிடம் விளக்கமும் கேட்பாராம்



கொழும்பு, செப்ரெம்பர் 10

ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட உயரதிகாரிகளில் ஒருவரான ஜேம்ஸ் எல்டெரை இலங்கை அரசு இலங்கையை விட்டு வெளியேற்றத் தீர்மானித்துள்ளமை குறித்து, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் பலத்த கண்டனமும், ஆழ்ந்த கவலையும் வெளியிட்டுள்ளார் என்று ஐ.நா. வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

'யுனிசெவ்' அமைப்பின் இலங்கைக்கான பேச்சாளர் ஜேம்ஸ் எல்டெரை இலங்கையை விட்டு வெளியேற்ற இலங்கை அரசு தீர்மானம் எடுத்துள்ளமை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் இயன்ற விரைவில் இலங்கையிடம் விளக்கம் கோர உள்ளார் என்றும் ஐ.நாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவுக்கு இன்று 10 மேலதிக பஸ்கள்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு இன்று பத்து பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும். வழமையாகச் சேவையில் ஈடுபடும் பஸ்களுடனேயே இந்த பத்து பஸ்கள் சேவையில் இன்று ஈடுபடுத்தப் படவுள்ளன.

இத்தகவலை போக்குவரத்துச்சபையின் வடபிராந் திய பொதுமுகாமையாளர் ச. கணேசபிள்ளை தெரிவித்தார். வழமையாகச் செல்லும் பஸ்களுக்கு பதிவுசெய்தவர்களுடன், பாதுகாப்பு அனுமதிபெற்றவர்களும் இன்று காலை யாழ்.ரயில் நிலையத்திற்கு சமுகமளித்துப் பயணத்தை மேற்கொள்ளலாம் என்று அவர் கூறினார். (அ-1)

## வன்னி மக்களை மீளக்குடியமர்த்தக் கோரி கொழும்பில் நேற்று முதலாவது ஆர்ப்பாட்டம்

### பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்

கொழும்பு, செப். 10

இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்துமாறு கோரியும், ஊடகவியலாளர் திஸநாயகத்தை விடுவிக்கக் கோரியும், தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபா சம்பள உயர்வு வழங்குமாறு வலியுறுத்தியும் கொழும்பில் நேற்று புதன்கிழமை நண்பகல் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி, தொழிற்சங்கங்கள், ஊடக அமைப்புகள் மனித உரிமை அமைப்புகள் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தையர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து

(16 ஆம் பக்கம் பார்க்க)




## வவுனியா இராணுவ அதிகாரியின் ஒப்பம் தேவை என அறிவிப்பு

கொழும்பு, செப். 10

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களை உறவினர்களிடம் கையளிப்பதற்கு வவுனியா இராணுவக் கட்டளையதிகாரியின் ஒப்பம் பெறவேண்டும் என அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அறிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களால் இந்த நடைமுறை செயற்படுத்தப்படுகின்றது என்று அவர் மேலும் கூறினார்.

வவுனியா நிவாரண முகாம்களில் இருக்கும் இடம்பெயர்ந்தோரைப் பொறுப்பேற்க அவர்களின் உறவினர்கள் முன்வந்தால், அவர்களை விடுவிக்க அரசு தயாராக இருக்கின்றது என்று மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இதற்கு முன் தெரிவித்திருந்தார்.

## அமைச்சர் திஸ்ஸவிதாரண இன்று யாழ்.விஜயம் பல்கலைக்கழகத்தில் அரசியல் தீர்வு குறித்து உரை



யாழ்ப்பாணம், செப். 10

இனப்பிரச்சினைக்கான அனைத்துக் கட்சித் தெரிவுக்குழுவின் தலைவரும் விஞ்ஞான, தொழில் நுட்பத்துறை அமைச்சருமான திஸ்ஸ விதாரண இரண்டு நாள் விஜயமாக இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறும் விஞ்ஞான தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வில் கலந்து கொள்ளும் அமைச்சர் பின்னர் பிரதேச செயலகங்களுக்குச் செல்வார்.

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப வள நிலையங்களை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களில் இருந்து 6,833 பேர் யாழ்ப்பாணத்துக்கு நாளை அழைத்துவரப்படுவர்

யாழ்ப்பாணம், செப்.ப10

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 6,833 பேரை நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவர ஏற்பாடாகியுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் இத் தகவலை நேற்று இரவு தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 35,000 பேரின் விவரங்கள் வவுனியா அரச அதிபரால் யாழ்.செயலகத்துக்கு அனுப்பப் பட்டிருந்தன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் இருந்து நாளை மொத்தம் சுமார் 10,000 பேர் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாவட்டங்களுக்கு

### அமைச்சர் பதியுதீன் தகவல்



கொழும்பு, செப்.10

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் சுமார் 10 ஆயிரம்பேர் நாளை விடுவிக்கப்படவுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளனர். மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இத்தகவலை நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

முகாம்களில் இருந்து விடுவிக்கப்படுவோரின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை அகற்ற மீண்டும் அமெரிக்கா உதவி

கொழும்பு, செப். 10

வன்னியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு சுமார் ஒரு லட்சம் டொலர் பெறுமதியுடைய இயந்திரங்களையும், பயிற்சிகளையும் இலங்கை இராணுவத்தினருக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை விரைவில் மீளக்குடியேற்றுவதற்கே இந்த நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்துள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்தது.

எம்பிலிப்பிட்டியவிலுள்ள இராணுவப் பொறியியல் கல்லூரியில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கிலுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றவென

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய. பெருந்திருவிழா 18 ஆம் திகதி ஆரம்பம்

வடமராட்சி, செப்.10

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும் இப்பெருந்திருவிழா வில் கொடியேற்றம் தொடக்கம், ஆறாம் திருவிழாவான புதன் கிழமை வரையான திருவிழா நாள்களில் சுவாமி உள்வீதி உலா வருவார். இதனைத் தொடர்ந்து 7 ஆம் திருவிழாவான எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம், 17 ஆம் திருவிழா வான எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக் கிழமை நிகழும் கேணித் தீர்த்தத் திருவிழா வரை சுவாமி வெளி வீதி உலா வருவார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை குருமடம் விநாயகர் தரிசனம், 26 ஆம் திகதி சனிக்கிழமை வெண்ணெய்த் திருவிழா, 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை துகில் திரு விழா, 28 ஆம் திகதி திங்கட்கிழமை பாம்புத் திருவிழா, 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கம்சன் போர்த் திருவிழா, 30 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழா.


அடுத்த மாதம் முதலாம் திகதி வியா ழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழா, 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த்திருவிழா, 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சமுத் திரத் தீர்த்தத் திருவிழா, 4 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கேணித் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் சுவாமி வெளி வீதி உலா வரும்போது வடக்கு வீதியில் கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாண வர்களின் நிகழ்வு இடம்பெறும்.

பெருந்திருவிழாவையொட்டி பருத்தித் துறை-மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயில், பருத்தித்துறை- தும்பளை ஊடாக வல்லி புரக்கோயில், யாழ்ப்பாணம் - வல்லிபுரக்கோயில் ஊடாக பருத்தித்துறை போன்ற பாதைகளூ டாகப் போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (203-236)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கண் மகிழ 23 ★ 05 ★ 1959



நெஞ்சம் நெகிழ 11 ★ 08 ★ 2009

அமரர்

## சடாரணமூர்த்தி வரதராசா (வரதன்)

கடந்த 2009.08.11 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக்கிரியைகளின் போது கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியும், எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும், உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளி லும் எமக்கு உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (10.09.2009) வியாழக்கிழமை முற்பகல் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன் புடன் அழைக்கின்றோம்.

எமது நினைவிற்கப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறி இருப்பின் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனை தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:-
குடும்பத்தினர்.


## உலக உணவுத்திட்ட நிவாரணம் வழங்கப்படும்

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக் கப்பட்டவர்களுக்கும் 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கும் உலக உணவுத்திட்ட செப்ரெம்பர்மாத நிவார ணம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதற்கான வழங்கற்கட்டளைகள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயல கத்திலுள்ள மாவட்ட முகாமைத்துவ பிரி வில் இன்று வெள்ளிக்கிழமை பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கப்பட வுள்ளன. இன்றைய தினமே வழங்கல் கட் டளைகளை பெற்று வழங்கல் கட்டளை யில் குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சியத்தில ருந்து பொருள்களை உடனடியாகப் பெற்று விநியோக நடவடிக்கைகளை ஆரம்பிக்கு மாறு அரசஅதிபர் பணித்துள்ளார். (அ-7)

## ஒன்றுகூடல்

அச்சுவேலி, செப். 10

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு இணைப்புப் பெற்றுள்ள கணித, விஞ் ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் புதிய உயர் தொழில்நுட்பக் கல் லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வவுனியா இணைப்புப் பெற்ற ஆசிரி யர்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு இணைப்புப் பெற்ற ஆசிரியர் ஒன்றியம் கேட்டுள்ளது. (04-11)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 10

சிறுவர் ஓவிய விழாவுக்கென யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களுக்கான கருத்தரங்கும் ஓவி யப் போட்டிகளும் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மக ளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் நடத்தப்படும் இப்பயிற்சிப் பட் டறையில் கலந்து கொள்ளும் மாணவர் களுக்கு ஏற்கனவே இதுபற்றி அறிவிக்கப் பட்டுள்ளது. வரைதல் தாள் வழங்கப்படும். வரைதலுக்குத் தேவையான வர்ணங் களை மாணவர்கள் கொண்டுவர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)


# NEFAD FOUNDATION Ltd. EMPLOYMENT OPPORTUNITY

## 1. EXECUTIVE OFFICER

Base Station:-
Yarl Fish Nets, 647 Beach Road, Gurunagar, Jaffna
Skills and Competencies:
Have minimum 7 years experience in any firm at the managerial level.
Experience in any production and marketing field (preferred)
Have communication skills.
Good knowledge of written and spoken Tamil and English and able to prepare reports.
Demonstrated knowledge in Fisheries sector.
Capacity to travel and ability to convince customs.
Computer Literacy in Win Word, Excel and Email Software.
Strong interpersonal and liaison skills.

**Role and Responsibility**

★ Responsibility for the day to day management of the fishnet factory.
★ Collect feasibility data and make market analysis within the country first and later on outside.
★ Travel to all parts of the country and make need assessment and the current production status.
★ Make an analysis of the raw materials available and comparative cost analysis in terms of quality, quantum and transport and related taxes.
★ Develop a production plan present it to the Board of Directors for approval, implement the same and report back to the Board.
★ Responsible for Production Planning matching with the market requirements
★ Supervise the production, and marketing.
★ Update with the Laws of the country in relation to factory, import, export and income related laws.
★ A weekly update on the production, sale, import of raw materials that needs planning, Market Survey etc. to be prepared and submitted to the Director
★ Ensure daily financial update with the help of the financial manager
★ Will be responsible for smooth running of the office and the production unit.
★ Responsible for all legal obligations including company act, EPF, ETF Act etc.

NEFAD Foundation Ltd recruits for its programme qualified persons without distinction of ethnic, background, religion or gender.
If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV with introduction letter, including your contact details **(address and telephone)** and minimal two non related references to the following address, latest by : **20th September 2009( Sunday).**

**Caritas- HUDEC**
**P.O Box 159,**
**14, Mathew's Road,**
**Deogu Street, Jaffna.** **or E- mail: hudec@sltnet.lk**

# நன்றி கூறுகின்றோம்

எமது தொலைந்த தங்க ஆபர ணத்தை கண்டெடுத்து சன்மானம் பெறாது தந்துதவிய மீசாலை சிவசம்பு சிவசோதி அவர்க ளுக்கு எமது நன்றிகள்.

கனகசிங்கம் ஜசிந்தா
மந்துவில் வடக்கு

# விற்பனைக்கு

CD பென்லி கறுப்புநிற மோட்டார் சைக் கிள் உடன் விற்பனைக்கு
(C/560852) தொடர்பு :- 077 3561776

# வேலையாள்கள் தேவை

எமது மதுபான விற்பனை நிலையத்திற்கு [illegible] யுவர்கள் இல.54, பலாலி வீதி, திருநெல்வேலி [illegible] (88726)

# கண்ணீர் அஞ்சலி



புதிய உயர் கல்லூரி இயக்குநர்கள்
திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை
அவர்களின் அன்பு நிறைந்த புத்திரன்

## சண்முகநாதன் சந்துதன்

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

GAQ (2010) மாணவர்கள்,
(58738) பேராதனைப் பல்கலைக்கழகம்.

# கண்ணீர் அஞ்சலி



புதிய உயர் கல்விக் கல்லூரி நிர்வாக இயக்குநர் திரு.சண்முகநாதன், எமது அன்புக்குரிய இந்துநாகரிக விரிவுரையாளர் அருள்நங்கை அம்மா ஆகியோரின் ஏக புத்திரன்

## செல்வன் சந்துதன்

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையுமுற்றி ருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

புதிய உயர் கல்லூரி பழைய மாணவர்கள்
(2008 - B.A பேராதனை).

# கண்ணீர் அஞ்சலி

புதிய உயர் கல்லூரி இயக்குனரும் ஆசிரியருமான
திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் ஏக புத்திரன்

## செல்வன் சந்துதன்

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத் தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதிய உயர் கல்லூரி GAQ 2010 மாணவன்
(88737) யோ.சிறிகாந்


# மரண அறிவித்தல்கள்

## அருட்பணி. மரியாம்பிள்ளை பாவிலுப்பிள்ளை (அ.ம.தி)



யாழ். அமலமரித்தியாகிகள் குழுமத்தைச் சேர்ந்த அருட்பணி.மரியாம்பிள்ளை பாவி லுப்பிள்ளை (அ.ம.தி) நேற்று முன்தினம் (08.09.2009) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக தற்போது வைக்கப்பட் டுள்ளது.

இன்று (10.09.2009) பிற்பகல் 3.15 மணிக்கு இறுதி இரங் கல் ஆராதனைக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 4மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட்சகோதரி கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தொடர்பகம், (88739) தகவல்,
657/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ். மாகாண முதல்வர்,
யாழ்ப்பாணம். (88739) அமலமரித்தியாகிகள் குழுமம்.

## கிருஸ்ணபிள்ளை விசாலாட்சி



ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ் ணபிள்ளை விசாலாட்சி 08.09.2009 செவ்வாய் அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ண பிள்ளையின் அன்பு மனைவியும், கம லாதேவி, தர்மலிங்கம் காலஞ்சென்ற லோகராஜா மற்றும் தேவராசா (மலே சியா), மகேந்திரன் (நோர்வே), ஸ்ரீஸ்கந்தராசா (டென் மார்க்), ஆனந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாக ராஜா, செல்வராணி, வள்ளியம்மை, விஜயலக்ஷ்மி, நிர்மலா, சுபாசினி ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீப்பிரியா, சொலேஜன், றஜீவன், கஜேந்திரன், பத்மபிரியா, திவா கர், பவித்ரா, காலஞ்சென்ற சுமன் மற்றும் பிரபாகரன், சுபோ, நூறா, ஜெனித்தா, தக்ஷா, நிரோஜன், ஜொய் ஷயா, சுஜீபன், லக்சியா, நிரோஜன், துளசிகா, வினோபா ஆகியோரின் பேர்த்தியும் கோபிதா, யதுசன், கேதுஜன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமரை வீதி,
ஆறுகால்மடம். (88742)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இருப்போரின் விவரம் வெளியானால்தான் இல்லாதோரின் எண்ணிக்கை அம்பலமாகும்

நீண்ட காலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக அடுத்த வாரம் கொழும்பில் முக்கிய மாநாடு ஒன்று நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. இதுபற்றிய தகவலை மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டாளரான மனோ கணேசன் எம்.பி. வெளியிட்டிருக்கின்றார்.

வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களின் விடுவிப்பு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்கள் மாதிரியே, கைது செய்யப்பட்ட அல்லது கடத்தப்பட்ட நிலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளினதும் காணாமற் போனோரினதும் பிரச்சினைகளையும் சமூகம் மறந்துவிட முடியாது என மனோ கணேசன் எம்.பி. குறிப்பிடுகின்ற கருத்து முற்றிலும் நியாயமானது; விரைந்து கவனிக்கப்பட வேண்டிய விடயமும் கூட.

அவர் சுட்டிக்காட்டுகின்றமை போல வெளியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வாதார மற்றும் அன்றாட, அவசர பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் அதே முக்கியத்துவம் - விசேடமாகக் கூறுவதானால் அதைவிட அதிக முக்கியத்துவமும் விரைவும் - கைதிகள் மற்றும் காணாமற்போனோரின் விவகாரங்களில் காட்டப்பட வேண்டும். நாட்டில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தும் முயற்சியில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக இவ்விவகாரம் பிணைக்கப்பட்டிருப்பதை யாரும் மறந்துவிடவோ, மறைத்துவிடவோ முடியாது. தடுப்புக் காவலில் சிக்கியோர் விடுவிக்கப்படுதலும், காணாமற் போனோர் தொடர்பில் அவர்களின் குடும்பத்தவர்களுக்குப் பொறுப்பான பதில் வழங்கப்படுவதும் புறம் ஒதுக்க முடியாத நடவடிக்கைகளாகும்.

இத்தகைய காணாமற்போனோர் பிரச்சினை என்பது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மட்டும் உரியதன்று. இலங்கை முழுவதும் வியாபித்திருக்கும் ஒரு சிக்கலாகும் இது.

இந்தச் சிக்கலின் ஆழ அகலம் - அல்லது பரிமாணம் - கடந்த ஆறுமாத காலத்துக்குள் புதிய விஸ்வரூப வடிவத்தை எடுத்திருப்பதை எவரும் அறியாதிருக்க முடியாது.

இப்பிரச்சினையைக் கையாண்டு குறைந்த பட்சம் நியாயமான தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் ஈடுபடுவதற்கு முதலில் காணாமற் போனோர் பற்றிய முறையான பதிவுப் பட்டியல் ஒன்று தேவைப்படுகின்றது. இத்தகைய பட்டியலைத் தயாரிப்பதில் மக்கள் கண்காணிப்புக் குழு போன்றவை தமது சக்திக்கும் அப்பாற்பட்ட வகையில் மும்முரமாகச் செயற்பட்டு, பல்வேறு முயற்சிகளையும் எடுத்தனவாயினும் அவற்றின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களின் பொருட்டு அம் முயற்சி முழு அளவிலான வெற்றியை எட்டவில்லை என்பதே உண்மையாகும்.

காணாமற்போனோரின் பட்டியலை முழுமையாகத் தயாரிப்பதற்கு முதலில் இலங்கைத் தீவில் உயிருடன் இருப்போரின் பட்டியல் அல்லது விவரம் அவசியமாகும். வன்னிக்கு அப்பாற்பட்ட இடங்களில் வாழ்வோர் பற்றிய தகவல்களைத் திரட்டுவதும் அவர்களின் இருப்புப் பற்றிய விவரங்களை உறவினர்கள் உறுதிப்படுத்திக் கொள்வதும் இயன்ற காரியம்தான். ஆனால் வன்னியில் சிக்குண்டுள்ள லட்சக் கணக்கான தமிழ் மக்கள் விடயத்தில் நிலைமை அப்படியல்ல. முதலில் அங்கு தடுப்பு முகாம்களில் யார், யார் இருக்கின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டால்தான் இல்லாமல் போனோர் அல்லது காணாமல் போனோர், 'மாயமாக' மறைந்தோர், கொல்லப்பட்டோர் போன்றோரின் விவரம் அம்பலத்துக்கு வரும்.

தடுப்பு முகாம்களில் 'சிறை' வைக்கப்பட்டுள்ள சுமார் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் பேரின் பெயர், விவரங்கள் மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டால்தான், காணாமற் போனோரின் பட்டியலின் உண்மையான 'பருமன்' தெளிவாகும்.

கடந்த 7 ஆம் திகதி மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு சந்தித்தபோதும் இத்தகைய பட்டியலை வெளியிடும்படியே வற்புறுத்தியது. அதற்கு அரசுத் தரப்பு கொள்கை அளவில் இணங்கியது என்று கூறப்பட்டாலும், அந்த உறுதிமொழி நடைமுறையில் செயற்படுத்தப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மேற்படி தடுப்பு முகாம்களுக்கு எதிரணி அரசியல் பிரமுகர்கள், மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்ற தரப்பினர் செல்வதற்குக் கடும் கட்டுப்பாடு தொடர்ந்து நீடிக்கின்றது.

அதேசமயம், வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மற்றும் காவலிலும், சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவோர் பற்றிய எண்ணிக்கைகள் தொடர்பான விடயங்களில் தொடர்ந்தும் குளறுபடியான செய்திகளே வெளிவருகின்றன.

வன்னிப் பெருநிலப்பரப்பை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து முற்றாக மீட்டாயிற்று என அரசு அறிவித்து நான்கு மாதங்கள் கடக்கப்போகின்றன. எனினும், இதுவரை வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் பகிரங்கப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது. அது வெளிவரும்போதுதான் காணாமற்போனோர் பற்றிய உண்மை ரூபம் அம்பலமாகும்.

அந்தப் பட்டியல் வெளியாகும்போதுதான் மக்கள் கண்காணிப்புக் குழு போன்ற கட்டமைப்புகளின் உண்மையான பணி பன்மடங்கு சுமையோடு ஆரம்பமாகும் என்பதும் திண்ணம்.

# பரீட்சைகளை பாடசாலைக் குடும்ப மட்டங்களில் நடத்தும் திட்டம் யாழ்.கல்வி வலயத்தில்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப் 10

யாழ்.கல்வி வலயத்தில் பாடசாலைகளின் கல்வித் தரத்தினை மேம்பாடு செய்யும் முகமாக மூன்றாம் தவணைப் பரீட்சைகளைப் பாடசாலை குடும்ப மட்டத்தில் நடத்துவதற்குஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் 'உதயனுக்கு' இத்தகவலைத் தெரிவித்தார்.

இவ்வகையில் 6 பாடசாலைகளை ஒரு குடும்பமாக இணைத்து ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு பரீட்சைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இக்குழுவினருக்குக் கணிப்பீட்டு அடிப்படையில் வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கான தேர்ச்சிபெறும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

வலயக்கல்வி அதிகாரிகளினால் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கும் ஒவ்வொரு குழுவினரதும் வினாத்தாள்கள் மீள் பார்வை செய்யப்பட்டு வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (50-06)

# உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய பாடத்திட்ட பரீட்சை

யாழ்ப்பாணம். செப்.10

இலங்கைஉயர்தொழில்நுட்பவியல் நிறுவன பழையபாடத் திட்டத்துக்கான பரீட்சை நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தில் தற்போது நடைபெற்றுவரும் பருவகாலப் பரீட்சைக்கு முன்னர் யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் கல்வி கற்றுப் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கும், பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடையத்தவறிய 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், வருட எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.சி, என்.டி.பி.எவ், என். டி. பி.எஸ், என்.டி.ஈ கற்கை நெறிகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகள் இறுதித் தடவையாக நடைபெறவுள்ளமையால் இச்சந்தர்ப்பத்தைச் சகலரும் தவறாது பயன்படுத்திக் கொள்ளும் முகமாக பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிக்கத் தவறியவர்களும் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நிறுவன பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

(50)

# மீள்குடியமர்த்தப்பட்ட மாணவர்களை பாடசாலைகளில் இணைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் , செப்.10

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து மீள் குடியமர்த்தப்பட்ட மாணவர்களை அவர்களுக்கு அண்மையில் இருக்கும் பாடசாலைகளில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் அனுமதிகளைப் பெறுவதற்கு இதுவரை 154 விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அம் மாணவர்களிற்கான விடுகைப் பத்திரங்களை மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் கூறினார்.

இம் மாணவர்கள் தொடர்ந்தும் கல்விகற்கும் அதேஆண்டில் அனுமதிக்கப்படுவர் எனவும் மாணவர் விரும்பின் அவர் கல்விகற்கும் ஆண்டில் இருந்து கீழிறங்கியும் கற்கலாம் என் றும் அவர் தெரிவித்தார். (06)

# டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் புதிய கிளை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.10

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் யாழ்ப்பாணத்துக்கான புதிய விற்பனைக் காரியாலயம் யாழ்.பிரதான வீதியில் சென்.மார்ட்டீன் கட்டடத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை காலை 9.15 மணியளவில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நாடாவினை வெட்டி சம்பிரதாய பூர் வமாகக்கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து யாழ்.நாகவிகாரையின் தேரர் ஸ்ரீபால தேரர், யாழ்.ஆயர் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

யாழ்.ஆயர் முதன்முதலாக மோட்டார் சைக்கிள் ஒன்றினைக் கொள்வனவு செய்து விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளர் ஸ்ரெஸ் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில் வங்கிகளின் முகாமையாளர்கள், காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், வர்த்தகப் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (50-9)

# வட மாகாணப் பெரு விளையாட்டு விழா அடுத்தவாரம் துரையப்பா விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம். செப்.10

வடமாகாண விளையாட்டு விழா எதிர்வரும் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விளையாட்டு விழாவில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஏ.சந்திரசிறி, அரசாங்க அதிபர் க.கணேஷ் ஆகியோருடன் தென்னிலங்கையில் இருந்து வரும் முக்கியஸ்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

போட்டி ஆரம்பமாகும் நாளன்று ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிரிக்கெட், கபடி, கரப்பந்தாட்டம் மற்றும் வலைப் பந்தாட்டம் என்பன போன்ற போட்டிகள் இடம்பெறவுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-6-86)

# வடக்கு, கிழக்கு மாணவர்களின் அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒத்துழைப்பு அவசியம்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

கொழும்பு, செப்.10

வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளுக்கு புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததென மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புதல் என்ற தலைப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகளை நிறைவுக்குக் கொண்டுவருவதனை மட்டும் வெறுமனே சமாதானம் எனக் குறிப்பிட முடியாது எனவும், மனித விழுமியங்களின் மெய்யான மேம்பாடே சமாதானம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முறுகல் நிலைகளைத் தவிர்க்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்

இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல் என்பவற்றுக்குப் புலம்பெயர் தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (50)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களைப் பொறுப்பேற்க உறவினர்கள் விண்ணப்பிக்கலாம்

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, செப்.10

வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலுள்ள அரசாங்க நிவாரணக் கிராமங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கவைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களை அவர்களது உறவினர்கள் அல்லது வெளியார் பொறுப்பேற்க விரும்பினால் அதற்காக விண்ணப்பிக்க முடியும் என அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் யூ.எல். எம்.ஹால்டீன் அறிவித்துள்ளார்.

பொறுப்பேற்கவிருக்கும் நபர்களுக்குத் தங்குமிட வசதி, உணவு, உடை மற்றும் ஏனைய தேவைகள் வழங்கப்படுவதை விண்ணப்பதாரி தனது விண்ணப்பப் படிவத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இது தொடர்பான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேச, கிராம சேவை அலுவலர் ஊடாகப் பிரதேச செயலாளரிடம் விண்ணப்பங்கள்சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பிரதேச செயலாளர், தனது சிபாரிசுடன் மாவட்டச் செயலாளரின் சிபாரிசையும் முன்வைத்து அவர் ஊடாக குறித்த நிவாரணக் கிராமம் அமைந்துள்ள மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.


எனினும் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுகின்றதா இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்கும் அதிகாரம் வன்னி இராணுவக் கட்டளை அதிகாரி அல்லது தகுதி வாய்ந்த அதிகாரிக்கே வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 26 | 11.09.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஷப்தமி |
| | மாலை 06.32வரை |
| நட்சத்திரம்: | ரோகினி |
| | பி.இ.02.50 வரை |
| சுபநேரம்: | 06.03 - 07.33 |
| ராகுகாலம்: | 10.33- 12.03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவக மைந்தனை வாழ்த்துகின்றோம்



தீவக மண்ணின் மைந்தனும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட மக்கள் தொடர்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான

## சில்வஸ்ரார் அலன்ரின்
(உதயன் தோழர்)

அவர்கள் (03.09.2009) வியாழக்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றுக்கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, எமது அமைச்சரின் வழிகாட்டலில் மக்கள் பணிகள் பல செய்து பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ சங்கம், புங்குடுதீவு-1. (சி/560846)

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வது)

## பதவி வெற்றிடம்

கீழ்க்காண் பதவிக்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை மேற்காண் விலாசத்திற்கு 25.09.2009 ற்கு முன் அனுப்பி வைக்கவும்.

பதவி :- விற்பனையாளர்
பதவி குறியீட்டு இலக்கம் : 308/17
சம்பள அளவுத்திட்டம் 8950-10300
65X10-70X10
வயது 18-45 பால் - ஆண்கள் மட்டும்

கல்வித்தகைமை

அ. கூட்டுறவுச் சங்க கனிஸ்ட பிரிவு தரச் சான்றிதழ் அல்லது எட்டாம் வகுப்பு சித்தி

ஆ. விற்பனை அலுவல்கள் பற்றிய 3 (மூன்று) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

கல்வித்தகைமை, அனுபவ சான்றிதழ்களின் போட்டோபிரதி இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு : கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை

1. தங்கள் தங்கள் சங்கத்துக்குக்கூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
3. கூட்டுறவுச் சங்க சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக சங்கம் கோரும் பிணைப்பணத்தைச் செலுத்தவேண்டும்.
4. சங்க எல்லைக்குட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

830, K.K.S, வீதி யாழ்ப்பாணம்.
09.09.2009

பொது முகாமையாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் எமது ஆத்ம நண்பனுமாகிய

**ஸ்.லகுமாறன்**

மலேசியா, ஏசியா பசுபிக் தொழில்நுட்ப பல்கலைக் கழகக் கல்லூரியில் கல்வி கற்று லண்டன் ஸ்ராபோட்செயர் பல்கலைக்கழகத்தின் Computing with Specialism in Software Engineering துறையில் B.Sc. (Hons) பட்டம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் எதிர்காலத்தில் வாழ்க்கையில்மென்மேலும் உயர்ச்சிபெற வாழ்த்துகின்றோம்.

ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலைய நண்பர்கள்
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.


## IDM BIT & BCS Centre Registrations

No.216, Navalar Road, Jaffna இல் மட்டுமே தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன!

BIT University Registeration [online] ஐ தற்போது IDM Help Desk இனூடாக இலவசமாக செய்துகொள்ளுங்கள் !

**போலிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள்!**

உடன் தொடர்பு கொள்க: 0772365461, 0772365460

IDM

IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.


# வடக்கின் வசந்தம் நடமாடும் சேவை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 10

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடமாடும் சேவை தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி 13 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இந்த நடமாடும் சேவை பிற்போடப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (1)

## தவறிவிட்டது

செட்டியார்மடம், அராலி வடக்கைச் சேர்ந்த குமரையா யோகநாதன் என்பவருடைய (581462832 V) இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை இம் மாதம் ஒன்பதாம் திகதி புதன்கிழமை முற்பகலில் யாழ்.நகருக்கு சென்று திரும்பிய வேளை காணாமற்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (C/560848)

## தவறிவிட்டது

வீமன்காமம், தெல்லிப்பழை என்னும் முகவரியை கொண்ட கலைச்செல்வி தில்லைநாயகம் என்பவரின் அடையாள அட்டை (736442981V) மற்றும் தொழில் அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, குறிப்பேடு என்பன அடங்கிய கைப்பை கடந்த 01.09.09 செவ்வாய்க்கிழமை துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழைச் சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா தேவி தேவஸ்தான காரியாலயம், தெல்லிப்பழை.
(88735)

## சேவை

உங்கள் உறவினர்கள் மலேசியா நாட்டில் இருந்து இலங்கை திரும்ப வேண்டுமா? UN அகதிகளாக உள்ளவர்கள், Passport ஐ தவறவிட்டவர்கள் மற்றும் வேறு பிரச்சினைகள் இருப்பின் மலேசியா அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பெற்று உங்கள் நாட்டிற்கு திரும்பிவர ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 6611783

## துரித பிரதியாக்கல் சேவை

நடமாடும் சேவையை முன்னிட்டு அடையாள அட்டை, பாஸ்போட் படங்களை உடனுக்குடன் படம் பிடித்து பெற்றுக்கொள்ள முடியும். 80/= மட்டுமே.

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ்ப்பாணம்,
நெல்லியடி, மானிப்பாய்,
மல்லாகம்.

## பூசகர் தேவை

ஊரெழு, சக்திபுரம், சிவபூரணி காளி அம்மன் ஆலயத்திற்கு இருகாலப் பூசை செய்வதற்கு அர்ச்சகர் தேவை. விரும்புவோர் ஆலயத் திருப்பணிச் சபை செயலாளர் அல்லது தலைவருடன் உடன் தொடர்பு கொள்ளவும். கொடுப்பனவு நேரில் தெரிவிக்கப்படும்.

சக்திபுரம் ஊரெழு. திருப்பணிச்சபை சிவபூரணி காளி அம்மன் ஆலயம்.

# 'ஓடிப்போ' டெங்கு ஒழிப்பு இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், செப் - 10

'ஓடிப்போ' டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு இறுவட்டு வெளியீட்டு விழா இன்று பி.ப 3 மணிக்கு காட்டுப்புலம் ஆர்.டீ.எஸ் வளாகத்தில் வலி மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தெற்காசியப் பிராந்திய ரி.எல்.எம்.ஐ நிறுவன இயக்குநர் கலாநிதி ஜெயக்குமார் டானியல் கலந்துகொள்வார். (7)

## உளம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் தரம் 4 மாணவச்செல்வம்

செல்வன் சண்முகநாதன் சந்துதன்

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு உளம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். மாணவமணியின் ஈடு செய்ய முடியா இழப்பினால் துயருற்றிருக்கும் பெற்றோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பணம் செய்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம். (சி/560851)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
திருமதி தமயந்தி ஜெயமுகுந்தன் அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி அன்னலெட்சுமி திருச்செல்வம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
(சி/560845)

## இரண்டாம் மாத நினைவலைகள்

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய இசை ஆசிரியையான
திருமதி நாகராஜேஸ்வரி சுகிர்தலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தை

அமரர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

அவர்கள் 10.07.2009 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்.வலய
இசையாசிரியர் கழகம்.
(88724)

## கண்ணீர்க் காணிக்கைகள்



பொருளியற் கல்லூரி, BARATHY கல்வி நிறுவன அதிபர் M. பத்மநாதன் (குயா) அவர்களின் பெறாமகன்

சண்முகநாதன் சந்துதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பொருளியற் -கல்லூரி யாழ்., இணுவில்.
BARATHY கல்வி நிறுவனம், சித்தன்கேணி.

ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள்.
(560840)

## மரண அறிவித்தல்

### சிவராமலிங்கம் இராஜகுமார்



கொடிகாமத்தைச் சேர்ந்தவரும் தற்பொழுது சவுதி அரேபியாவில் தொழில் புரிந்தவருமான சிவராமலிங்கம் இராஜகுமார் 05.09.2009 சனிக்கிழமை அகால மரணமானார்.


அன்னார் காலஞ்சென்ற சிவராமலிங்கம் - கங்காதேவி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்பு மருமகனும், சரோஜினியின் அன்புக் கணவரும், பவித்திரா, கபிலேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஜெயகுமார், காலஞ்சென்ற செல்வகுமார், தேவகுமார், சாந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணலீலா குணசிங்கம், அமரசிங்கம், இந்திரலீலா இராஜசூரியர், பாலசந்திரன், பாலேந்திரன், மகேந்திரன், விஜயலஷ்மி கேதீஸ்வரன், ஜெயலஷ்மி நடேசன், இராஜலஷ்மி சசீந்திரன், கணேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
69/3B, PIRIWENA ROAD,
RATMALANA. T.Phone : 4947039
(சி/560637)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய தேர், தீர்த்தத் திருவிழாக்களின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
பஞ்சமுக விநாயகர் தேருக்கு எழுந்தருளுவதையும் தேர் வீதியுலா வருவதையும் முதல் இரு படங்களிலும் காணலாம்.
சுவாமி தீர்த்தமாடுவதையும் விநாயகர், சுப்பிரமணியர் வீதியுலா வருதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

# யாழ்ப்பாணக் கல்லூரியில் 27ஆவது வருடமாக நாளை நடைபெறுகின்றது பாரதி விழா

1982 செப்ரெம்பரில் பெருங்கவிஞன் 'பாரதியின் நூற்றாண்டு நிறைவு விழாவுடன்' தொடங்கிய யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றத்தினரின் 'பாரதிவிழா' இந்த ஆண்டும் நாளைய தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி 'ஒற்லி' மண்டபத்திலே நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் பாரதிவிழா மூலவர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளின் ஆசியுரையுடன் தொடங்கவிருக்கும் இவ்வாண்டு பாரதி விழாவையும் வழமைபோல் முன்னிலை வகித்து நடத்துபவர் கல்லூரி முதல்வர் என்.விமலேந்திரன் ஆவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி த.கலாமணி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். நாளைய பாரதி விழாவிலே கல்லூரி ஆசிரியர்கள் பங்குபற்றும் சிறப்புப் பட்டிமண்டபமும் மாணவர், மாணவியரின் நாடகம், நாட்டியம், இசைப்பாடல்கள், உரைகள் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

"உண்மையின் பேர் தெய்வம் என்போம் அன்றி,
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்'!
உண்மைகள் வேதங்கள் என்போம் பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்!"

எனப் பாடி முழங்கி உண்மையைப் போற்றி வணங்கியவன் உலகப் பெருங் கவிஞன் பாரதி. அவனைப் பொறுத்த வரை உண்மை எதுவோ அவ்வுண்மை மட்டுமே கடவுள். அவ்வுண்மை மட்டுமே வேதம். அதனால்தான்,

"வையகம் காப்பவரேனும் – சிறு
வாழைப்பழக்கடை வைப்பவரேனும்
பொய் அகலத் தொழில் செய்தே புவி
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்!"

என்று உறுதிபடத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் பாடி வைத்தான். அவ்வண்ணமே வாழ்ந்தும் காட்டினான். அவன் வருணித்துப் பாடிய அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்திற்கொண்டு விளங்கிய அன்றைய ஊமை இந்திய மக்களிடையே மேலும் வாழப் பொறுக்காமல்தான் தனது முப்பத்தொன்பதாவது அகவையிலேயே பாரதி தனக்கான முடிவுரையை எழுதிக்கொண்டான்போலும்.

அத்தகு மகத்தான மாமனிதக் கலைஞனை, மாபெருங் கவிஞனை நினைவுகூர்ந்து போற்றிச் சிலிர்க்க நீங்கள் அனைவருமே யாழ்ப்பாணக் கல்லூரி பாரதிவிழாவுக்கு அணிதிரண்டு வாருங்கள். கலை இலக்கிய நயம் சுவைத்து உய்க.

**- ஜெ.கி.ஜெயசீலன்.**

## தென்மராட்சி வலய பாடசாலைகளில் விடுவிக்கப்பட்ட மாணவர் இணைவு

யாழ்ப்பாணம், செப்.10

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகள் கடந்த திங்கட்கிழமை மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்பட்டபோது பெருமளவு மாணவர்கள் புதிதாக இணைவதற்கு வருகை தந்ததாக அதிபர்கள் தெரிவித்தனர்.

பிரதேச நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே புதிதாக இணைவதற்கு வருகை தந்ததாகவும் தெரிவித்தனர். (203-207)

## தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் 2ஆம் அணி இன்று புறப்படுகிறது

யாழ்ப்பாணம், செப்.10

கொழும்பில் நடைபெற்று வரும் தேசிய மட்டத்திலான பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் பங்குபற்ற இரண்டாவது அணி இன்று புறப்படவிருக்கிறது.

இரண்டாம் அணியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களை தமது பயண ஒழுங்குகளுடன் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுக் குழுச் செயலாளர் மு.நடராசா அறிவித்துள்ளார்.

கரப்பந்து, ஹொக்கி, மென்பந்து, கபடி, எல்லே, கூடைப்பந்தாட்டம், கரம், மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கான போட்டிகளில் பங்குபற்றுகின்ற வீரர்களே இன்று பயணமாகின்றனர். (201)

## அதிபர்களுக்கான கலந்துரையாடலும் நடமாடும் சேவையும் நாளை

யாழ்ப்பாணம், செப்.10

தீவக வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடலும் நடமாடும் சேவையும் நாளை காலை 8.30 மணி முதல் தீவக வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இக்கலந்துரையாடலில் மாகாண அலுவலர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன், நடமாடும் சேவைக்கு விண்ணப்பித்தவர் கள் சமுகமளித்து தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வுகாண முடியும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (06-267)

# ஓய்வூதிய இலக்கம் பெறாதவர்களை நடமாடும் சேவையில் பயன்பெற அறிவுறுத்து

நல்லூர்,செப்.10

ஓய்வூதியர் சேவையிலுள்ளோர் மற்றும் 03.09.2009ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வூதியம் பெற்றவர்கள் ஆகியோர், விதவைகள், அநாதைகளுக்கான ஓய்வூதிய இலக்கம் பெற வேண்டியது அவசியம் என்று ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

திணைக்களம் வெளியிட்டுள்ள 4/95 ஆம் இலக்க 09.11.1995ஆம் திகதியிடப்பட்ட சுற்று நிரூபம் மூலம் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

விதவைகள், அநாதைகளுக்கான இலக்கத்தை இதுவரை பெறாதவர்கள் தாங்கள் இறுதியாகப் பணியாற்றிய திணைக்களத்துடன் தொடர்புகொண்டு உரிய படிவங்களைப் பெற்று எதிர்வரும் 12ஆம் 13ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும் நடமாடும் சேவையில் சமர்ப்பிக்குமாறு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் செயலாளர் செ.சந்திரசேகரம் தெரிவித் துள்ளார். (203-111)

## வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் திருமதி கிருபாசக்தி கருணா பக்கவாத்தியங்கள் சகிதம் 'திருப்புகழ்'ண் இன்னிசைப் பாடல்களை வழங்குவார். (203-236)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் தீர்த்தத்திற்கு திருவடிநிலை செல்ல அனுமதி

யாழ்ப்பாணம் செப். 10

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழாக்களுக்குப் பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு ஏற்றவகையில் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலயத்தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் தீர்த்தத்திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

தீர்த்தத் திருவிழாவன்று சுழிபுரம் திருவடி நிலையில் இடம்பெறும் தீர்த்தத்துக்குப் பக்தர்கள் எதுவித தடையுமின்றிச் சென்றுவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

பொன்னாலை கடற்படையினரிடம் ஆலய பரிபாலன சபையினர் இதற்கான அனுமதியினை பெற்றுள்ளனர்.

தீர்த்தத்தினத்தன்று சுழிபுரம் தீர்த்தக்கரையில் இருந்து விசேட மங்கள வாத்தியங்கள் சகிதம் சுவாமி ஆலயத்தை வந்தடைவார். (203-28)

## கெருடாவிலில் சிசு உரப்பையில் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.10

தொண்டைமானாறு கெருடாவில் பகுதியில் இருந்து பொலித்தீன் பையில் கட்டப்பட்ட நிலையில் சிசு ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பொலிசாரால் மீட்கப்பட்ட இந்தச்சிசு வல்வெட்டித்துறை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. அங்கிருந்து இரவு 7.30 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது.

சிறுவர் பராமரிப்புப்பிரிவில் குழந்தை நலமுடன் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



'ஈ சொவ்ற்' கணனி நிறுவனத்தின் பயிற்சிநெறிக் கருத்தரங்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
'ஈ சொவ்ற்' யாழ்.முகாமையாளர் எஸ்.ஜெயக்குமார், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் எம்.இக்னேசியஸ், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.அருளானந்தம் 'ஈ சொவ்ற்' வடக்கு கிழக்குப் பணிப்பாளர் மா.சைலேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவதையும் கலந்துகொண்ட மாண வர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் இளைஞர்களை பொலிஸ் பிரிவில் இணைத்துக் கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

முதலாவது படத்தில் இலங்கை பொலிஸ் சேவையின் ஆள்சேர்ப்புப் பிரிவின் பணிப்பாளர் ஜெயக்கொடி உரையாற்றுவதையும் யாழ்.பொலிஸ் நிலையத்தின் உயர் அதிகாரிகள் அமர்ந் திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச செயலர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஓங்காரன்)

# 'யுனிசெவ்'பிரமுகர் வெளியேற்றம் குறித்து அந்நிறுவனம் கவலை - ஏமாற்றம்

## ஒருதலைப்பட்சமாக நடந்தது என்பதற்கு முற்று முழுதாக ஐ.நா.பேச்சாளர் மறுப்பு

கொழும்பு, ஓக. 10

அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த 25 வருடகாலப் போரின்போது இலங்கை அரசு விடயத்தில் ஐ.நா. சிறுவர் அமைப்பு (யுனிசெவ்) ஒருதலைப்பட்சமாக நடந்துகொண்டது என்ற இலங்கையின் குற்றச்சாட்டை அந்நிறுவனம் நிராகரித்திருப்பதுடன் கவலையையும் வெளியிட்டுள்ளது.

'யுனிசெவ்' அமைப்பின் பேச்சாளரும் கொழும்பு வதிவிடப் பிரதிநிதியுமான ஜேம்ஸ் எல்டரின் 'விசா' அனுமதியை இரத்துச் செய்வதாக இலங்கை அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

இலங்கை அரசு எடுத்துள்ள இத் தீர்மானம் குறித்து 'யுனிசெவ்' முழுமையாகக் கவலையும் ஏமாற்றமும் அடைந்துள்ளது என்று அந்நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆன்வெனமன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் மேற்படி தீர்மானம் குறித்து எதுவித காரணமும் குடிவரவு ஆணையாளர் பி.பி. அபயக்கோனால் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் எல்டர் செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்குள் வெளியேற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறைச் செய்திகளின்படி புலிகளுடனான போரின்போது சிக்குண்ட சிறுவர்கள் தொடர்பாக எல்டர் வெளியிட்ட கருத்துக்களால் இலங்கை அரசு ஆத்திரம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த ஆண்டு ஆரம்ப காலத்தில் யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பெரும்பாலான சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என ஐ.நா.வும் அதனோடு ஒத்த மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டியிருந்தன.

வெனமன் கருத்து வெளியிடுகையில் ''போரில் சம்பந்தப்பட்டிருந்த இருதரப்பின் பகுதிகளாலும் சிறுவர்கள் துன்பமுற்றமை தொடர்பாக யுனிசெவ் அமைப்பு எல்டர் ஊடாகத் தொடர்ச்சியாகக் கருத்து வெளியிட்டு வந்தது. அச்சிறுவர்களின் பாதுகாப்பைப் பேணும்படியும் வற்புறுத்தி வந்தது. எமது செயற்பாட்டில் ஒருதலைப்பட்சம் காட்டப்பட்டது என்ற குற்றச்சாட்டை முற்றுமுழுதாக மறுக்கின்றோம்'' என்று கூறினார்.

### ஐ.நா. செயலர் ஆழ்ந்த கவலை

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தின் செயலாளர்நாயகம் பான்கிமூனின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றித் தெரிவிக்கையில், எல்டர் வெளியேற்றப்பட்டது குறித்து செயலாளர் நாயகம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளார்.

விரைவில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க் வரும்போது அவருடன் இது பற்றிப் பேசவிரும்புவ தாகவும் பான்கிமூன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஐ.நா. மேற்கொண்டுள்ள பணிகளில் ஐ.நா. செயலாளர் நாயகம் முழுநம்பிக்கை வைத்துள்ளார். இதில் உயிர்களைக் காப்பாற்றும் நோக்கில் அவசியமானபோது பகிரங்கமாகக் கருத்துக்கள் வெளியிடுவதும் அடங்கும் - என்று கூறினார் ஐ.நா. பேச்சாளர். (ப)

# முன்பள்ளிச் சிறார்களுக்கு இம்மாதம் முதல் சத்துணவு

கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்குவதற்கு 'போரூட்' நிறுவனம் முன்வந்துள்ளது. இப் பகுதிகளில் இயங் கும் 710 முன்பள்ளிகளைச் சேர்ந்த 17 ஆயிரத்து 500 சிறார்களுக்கு இம்மாதம் தொடக்கம் நவம்பர் மாத காலப் பகுதிவரை சத்துணவு வழங்குவதற்காக 11 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலகம் தெரிவித்தது. (203-300)

# வவுனியா அகதி முகாம்களிலுள்ள மக்களில் 10 வீதத்தினர் கூட மீள்குடியேற்றப்படவில்லை

## தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

வன்னி முகாம்களில் உள்ள தமிழ் அகதிகளில் 10 சதவீதத்தினர் கூட இன்னமும் தங்கள் சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றப்படவில்லை என்பதை ஜனாதிபதிக்கு முக்கியமாக தெரியப்படுத்தி உள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது. இச்சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுக்கு கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமை தாங்கினார்.

அவர் ஜனாதிபதியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு குறித்து வழங்கிய பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

புலிகளுடனான யுத்தம் முடிவடைந்து 180 நாள்கள் நிறைவடைவதற்குள் வன்னி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று அரசு கூறிவருகின்றது. ஆனால், முகாம்களிலுள்ள அகதிகளில் 10 சதவீதத்தினர் கூட இன்னமும் தங்கள் சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றப்படவில்லை. இதனை நாம் முக்கியமாக ஜனாதிபதிக்கு இச்சந்திப்பின்போது தெரியப்படுத்தி உள்ளோம். அரசினால் கூறப்பட்டு வரும் அந்த 180 நாள்களுக்கு இடையில் முகாம்களில் உள்ள அகதிகளில் 60 - 80 சதவீத்தினராவது கட்டாயம் தங்கள் சொந்த இடங்களுக்கு அரசினால் மீள்குடியேற்றப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்-என்றார். (த-09)

# 'நிஷா'வால் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு கமநல சேவை நிலையத்தால் இலவசமாக விதைநெல்

யாழ்ப்பாணம்,செப்.10

'நிஷா' பெரும்புயல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு இலவசமாக விதைநெல், கமநல சேவைகள் நிலையம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் ஊடாக ஜனாதிபதி அவர்களுக்கு முன்மொழிந்த திட்டமே விவசாயிகளுக்கு இலவச விதைநெல் கிடைப்பதற்கு வழி கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் 'நிஷா' பெரும்புயலினால் 90 வீதமான குடாநாட்டு விவசாயிகளின் நெற்பயிர் அழிவடைந்தது.

இதனால் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்துக்கும் யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.ம.க. முதலியார் கொண்டு வந்திருந்தார்.

இந்நிலையில் நீண்ட காலத்தின் பின்னர் இத்திட்டம் தொடர்பாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் எடுத்த தொடர் நடவடிக்கையைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் பரப்பு ஒன்றுக்கு 1 3/4 கிலோ வீதம் விதைநெல்லை இலவசமாகப் பெறுகின்றனர் என்று மேலும் கூறப்பட்டது.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் கமநல சேவை நிலையத்தால் இந்த விதைநெல் வழங்கப்பட்டு வருகிறது. (203-302-131)


2009 A/L பரீட்சை செய்தவரா நீங்கள்?

நீங்களும் செய்திடலாம் BIT Degree !



BIT

Bachelor of Information Technology [BIT]
of
(University of Colombo)

உடன் தொடர்பு கொள்க: 0772365461, 0772365460

IDM

IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.




நயினாதீவு வடக்கு, தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ந.ஜெயராஜாவுக்கு சங்கத் தலைவி திருமதி சத்தியேந்திரா மாலை அணிவித்து வரவேற்பதையும் பெண்களுக்கிடையிலான கயிறிழுத்தல் போட்டி இடம் பெறுவதையும், பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.செல்வச்சந்திரன் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் எஸ்.லோகேந்திரன் கிராம அலுவலர் ரி.கோகுலரூபன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் தொடர்பாக கொழும்பில் அடுத்த வாரம் மாநாடு

கொழும்பு, செப். 10

நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக கொழும்பில் அடுத்த வாரம் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

மக்கள் கண்காணிப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு தொடர்பாக அதன் ஏற்பாட்டாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்று வந்த போர் முடிவுக்கு வந்துவிட்டது என அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்ட பல்லாயிரக்கணக்கான பயிற்சிபெற்ற போராளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களுக்குப் புனர்வாழ்வுப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

அதேபோல் வடக்கில் சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் தடுத்துவைக்கப்பட்ட நிலையில் அவர்களது மீள்குடியேற்றம் இன்று முதன்மைப் பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. இந்நிலையில், இதே காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்ட அல்லது கடத்தப்பட்ட நிலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளினதும், காணாமல் போனவர்களினதும் பிரச்சினைகளை நமது சமூகம் மறந்துவிட முடியாது.

வெளியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் அதே முக்கியத்துவம் கைதிகளுக்கும், காணாமல் போனவர்களுக்கும் வழங்கப்படவேண்டும். தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும் நோக்கில் தடுப்புக் காவல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு அல்லது சட்ட ரீதியான பிணை அல்லது புனர்வாழ்வு என்ற அடிப்படைகளில் சுதந்திரம் வழங்கப்படவேண்டும். அதேபோல் சட்டவிரோதமான தடுப்பு முகாம்கள் கலைக்கப்பட்டு, காணாமல் போனவர்கள் தொடர்பில் பொறுப்பான பதில்கள் சம்பந்தப்பட்டவர்களது குடும்பங்களுக்குத் தரப்படவேண்டும்.

கொழும்பு மகசின் மற்றும் சீஆர்பி, களுத்துறை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி ஆகிய சிறைக்கூடங்களிலும், பூசா தடுப்பு முகாமிலும் வைக்கப்பட்டவர்களின் முழுமையான விவரங்களும், பிரச்சினைகளும் வெளிக் கொண்டு வரப்படவேண்டும்.

இக்காரணங்களுக்காக தடுப்புக் காவல் கைதிகள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பில் அடுத்த வாரத்தில் கொழும்பில் மாநாட்டை நடத்துவதற்கு மக்கள் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்துள்ளது. இம்மாநாட்டில் சம்பந்தப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்துகொள்ளவேண்டும். இம் மாநாடு நடைபெறும் இடம் மற்றும் ஏனைய விவரங்கள் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் ஊடகங்களில் அறிவிப்புகள் வெளியிடப்படும் என்று தெரிவித்தார். (சி)

## யாழ்.போக்குவரத்து சீர் இல்லை; முதலீடு செய்வதில் பெரும் சிக்கல்

கொழும்பு, செப்.10

யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து நடவடிக்கைகள் இன்னமும் சீர் பெறாத நிலையில், பாரிய முதலீடுகளை அங்குமேற்கொள்வதிலும், புதிய தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலும் தற்போது பெரும் இடர்பாடுகள் காணப்படுகின்றன என்று இலங்கை முதலீட்டுச் சபை அறிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தீம்மிக்க பெரேரா இதனைத் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து இன்னமும் சீர் பெறாத நிலையில் சுற்றுலாப் பயணத்துறையை அங்கு ஊக்குவிப்பதிலும் இடர்பாடுகள் காணப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''ஏ-9 பாதை பொதுமக்களின் பாவனைக்கு இன்னமும் முழுமையாக அனுமதிக்கப்படவில்லை. விமானப் போக்குவரத்துக்கான கட்டணங்களோ மிகவும் அதிகம்'' இந்த நிலையில் அங்கு முதலீடுகளை மேற்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## காலியில் ஜே.வி.பி.வேட்பாளர் மீது அரச ஆதரவாளர்கள் தாக்குதல்

காலி, செப். 10

எதிர்வரும் தென் மாகாண சபைத் தேர்தலில் காலி மாவட்டத்திலிருந்து போட்டியிடும் ஜே.வி.பி. வேட்பாளரான தர்சன சமந்த என்பவரும் அவரது ஆதரவாளர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரான சச்சின் வாஸ் குணவர்தனவாலும், அவரது ஆட்களாலும் தாக்கப்பட்டுள்ளார்கள் என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த ஜே.வி.பி. ஆதரவாளர்கள் தற்போது ஹினிதும வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜே.வி.பியினர் ஹினிதும பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள். (சி)

## உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,செப்.10

மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் எதிர்வரும் ஒக்ரோபர் முதல் வாரத்தில் உள்ளூராட்சி மாநாட்டையும் கண்காட்சியையும் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார்,வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் இக் கண்காட்சியில் பங்குபற்றுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு சபையின் சார்பில் பத்து அலுவலர்களும் காட்சிக் கூடத்தில் இரண்டு அலுவலர்களும் பங்குபற்ற முடியுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (50- 207)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய லொறி டிசெம்பர் வரை தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், செப்.10

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற லொறியை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 31 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த லொறியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியமைக்காக ஏற்கனவே இரு தடைவைகள் நீதிமன்றில் அபராதம் செலுத்தியதை பொலிஸார் சுட்டிக்காட்டியதையடுத்து எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை லொறியைத் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய லொறியின் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 18 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (203-207)

## வாசகர் திருமுகம்

### முடங்கிய தொழில்களை மீண்டும் தொடங்குக

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வந்த யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில் எமது நாட்டிலே பலவிதமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் காரணமாக எத்தனையோ விதமான தொழில் வளங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. யாழ்.குடாநாட்டில் பல்வேறு வகையான தொழிற்சாலைகள் இயங்கி வந்துள்ளன. எனவே அத் தொழிற்சாலைகளை மீண்டும் இயங்கச் செய்வதன் மூலம் நாட்டில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவும் வறுமை நீங்கவும் உற்பத்திப் பொருள்கள் அதிகரிக்கவும் முடியும்.

பொருளாதார ரீதியில் எமது மக்கள் முன்னேற்றமடையக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் இயங்கி வந்த தொழிற்சாலைகளான நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, மஸ்கன் சீற் உற்பத்தித் தொழிற்சாலை, நாவற்குழி கண்ணாடித் தொழிற்சாலை, அச்சுவேலி தொழிற் பேட்டை என பல விதமான தொழிற்சாலைகள் இயங்கிவந்தன.

மீண்டும் அத்தகைய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டால் நாடு மீண்டும் புதுப்பொலிவைப் பெற்று மக்களின் எதிர்கால வாழ்வும் சுபீட்சமடையும். எனவே அரச அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நல்லதம்பி கனகலிங்கம்.
கோப்பாய்.

### தரிசு நிலங்களால் ஏற்படும் பிரச்சினைகள்

ஆதன வரி சம்பந்தமாக வாசகர்களுக்கு நல்ல விளக்கங்களைக் கொடுக்கும் ஒரு கட்டுரை அண்மையில் 'உதயனில்' பிரசுரமாகியிருந்தது.

தரிசாக விடப்பட்டிருக்கும் காணிகளினால் பொதுவாகப் பெரும் தீமைகள் ஏற்படுகின்றன. டெங்குக் காய்ச்சல் தொடக்கம் திருடர் தொல்லை வரை பல்வேறு விடயங்களுக்கு இத்தரிசு நிலங்கள் வாய்ப்பாக அமைகின்றன.

இவற்றைத் துப்புரவு செய்யவோ, அன்றி செய்விக்கவோ உள்ளூராட்சி சபைகளுக்கு எதுவித அதிகாரமும் கிடையாதா? அப்படியாயின் இதற்கு என்ன தீர்வு.

முக்கியமாக நகரசபை, மாநகரசபை எல்லைக்குட்பட்ட இடங்களிலாவது இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். தேவைப்பட்டால் மாத்திரம் துப்புரவு செய்வது என்று நில உரிமையாளர்கள் கொண்டிருக்கும் கருத்து தவறானது. காணியின் நிலையினால் பொது இடைஞ்சல் ஏற்பட வாய்ப்பு இருந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளுக்கு இருந்தால் பல நன்மைகள் ஏற்படும்.

வை.சந்திரபாலன்.
கொக்குவில்.

## நல்ல பக்தன்

நல்ல பக்தன் யார்? சத்பாவம்- நல்லெண்ணங்கள் கொண்டவன், நல்ல பழக்கங்கள் கொண்டவன். நல்ல உணர்வுகள் கொண்டவன். அத்தகைய பக்தனையே கடவுள் தேடுகிறார். இறைவன் நாமத்தையே ஓதிக்கொண்டிருப்பவன் பக்தன் அல்ல. ஒலிநாடா கூடத்தான் பஜனை செய்கிறது. கிராமபோன் தட்டுகள் பஜனைகள் பாடுகின்றன. இரண்டுமே உயிரில்லாதவை. சைதன்ய (விழிப்பு) உணர்வு கொண்ட மனிதன், இதயபூர்வமாக பஜனை செய்கிறான். ஒவ்வொரு சொல்லும் இதயத்திலிருந்து வெளிவர வேண்டும். இதயத்தில் நாம் அன்பின் வடிவைக்காண்கிறோம். அனைத்தும் அன்பிலிருந்தே வெளிவருகின்றன.

தெய்வீக ஆத்மாவின் வடிவங்களே!

பிரேமையே ஆத்மா எனப்படுகிறது. பிரேமையே பிரம்மன் எனப்படுகிறது. பிரபஞ்சம் அனைத்தும் பிரம்மனே. கடவுள் எங்கே? அவர் உனக்குள் இருக்கிறார். அவர் உனக்குள் இருக்கும் போது, நீ அவரை ஏன் வெளியே தேட வேண்டும்.

தண்ணீரில் பிறந்து, தண்ணீரிலேயே இருந்து, நீர்க்குமிழி, தண்ணீரிலேயே கரைகிறது. மனிதனே நீர்க்குமிழி, இறைவனே தண்ணீர்.



உயர்ந்தவனாக இருக்க ஆசைப்படாதே. நல்லவனாக இருக்கப் பாடுபடு. நீ நல்ல வனாக இருந்தால், மற்றவையெல்லாம் தானாகவே பின் தொடரும். பெரிய மனிதன் நல்லவனாக இருப்பவன் என்று கூற இயலாது. நீ நல்லவனாக இருந்தால், நல்ல தன்மையில் உயர்வு அடங்கியுள்ளது.

சாயி சிந்தனை






தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இடைக்குறிச்சி சிறப்புக் கூட்டுறவு நகர் கடை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கள விளக்கேற்றுவதையும் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கெருடாவில் விவேகானந்த சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கத்திற்கு இலங்கை வங்கியால் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம், இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் சி.சிறிகாந்தன் மற்றும் ஊழியர்களையும், பயனாளிகளில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஐ.தே.கவின் குரல் ஓங்கி ஒலிக்கும்

## சபையில் அக்கட்சி எம்.பி. முழக்கம்

கொழும்பு, செப்.10

அரசின் ஊடக அடக்குமுறை நிறுத்தப்படும்வரை அதற்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சியின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

"ஊடகத்துக்கு ஆதரவான எமது குரலை அடக்குவதாக இருந்தால் எமது சடலங்களைக் கடந்து சென்றுதான் நிறுத்த முடியும்'' என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றில் இது தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

யுத்தம் முடிந்துவிட்டது. மக்கள் அச்சமின்றி சுதந்திரக்காற்றை சுவாசிக்கின்றனர். உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவை இம்மக்களை மிரட்டிக் கொண்டிருக்கின்றன. இச்சட்டங்கள் விசேடமாக ஊடகங்களைப் பின்தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

ஊடகவியலாளர்கள் மீதான கைது, மிரட்டல் போன்றவை இப்போது தொடர்கின்றன. செய்தியை வெளியிட சுதந்திரம் இருக்கவேண்டும். இது சர்வாதிகார நாடல்ல. ஜனநாயக ஆட்சி நடக்கும் நாடு. இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் மதிக்கப்படல் வேண்டும்.

ஊடக அடக்குமுறை தொடர்பாக நாம் பல தடவைகள் இச்சபையில் எடுத்துக்கூறி பிரதமரிடம் விளக்கம் கோரியிருந்தோம். அவை தொடர்பாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் கூறியிருந்தார். ஆனால், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசின் இந்த ஊடக அடக்குமுறை நிறுத்தப்படும்வரை எமது குரல் இதற்கு எதிராக ஒலித்துக் கொண்டேதான் இருக்கும். எந்தச் சக்தியாலும் அதை நிறுத்த முடியாது. எமது சடலங்களைக் கடந்து சென்றுதான் எமது குரலை நிறுத்தமுடியும் - என்றார். (சி)

# பல்கலைக்கழக அசம்பாவிதங்களுடன் முக்கிய அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு

கொழும்பு, செப். 10

பல்கலைக்கழகங்களில் இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களுடன் ஒருசில முக்கிய அரசியல்வாதிகளுக்குத் தொடர்புள்ளது என்று ஐ.தே.கட்சி எம்.பி.அகில விராஜ் காரியவசம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்கலைக்கழகங்கள் திருத்தச்சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை பல்கலைக்கழகங்களில் போதிக் ப்படும் பாடங்களில் 60 வீதமானவை நமது நாட்டுக்கு எந்தவகையிலும் பொருந்தாதவை.இதன்மூலம் எமது நாட்டுப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யமுடியாது.

கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தவிர நாட்டில் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் பல குறைபாடுகளும், வளப்பற்றாக் குறைகளும் காணப்படுகின்றன. இவற்றை நிவர்த்திசெய்வதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொடுக்க உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்று உயர்கல்வி அமைச்சர் விஸ்வவர்ணபால இங்கு தெரிவித்தார். ஆனால் பல்கலைக்கழகங்களில் பல அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன. அவற்றுடன் சில அரசியல் வாதிகளும் தொடர்புபட்டுள்ளனர்.முதலில் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (சி)

# நிறைவேற்று அதிகாரத்துக்கு எதிராக ஜே.வி.பி. துண்டுப் பிரசுர போராட்டம்

கொழும்பு, செப். 10

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றியமைக்க வேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம் முதல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் போராட்டம் ஒன்றை ஜே.வி.பி. ஆரம்பித்துள்ளது.

இந்தப் போராட்டம் விரைவில் பொது மக்களின் போராட்டமாக மாறும் என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று முன்தினம் மாலை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தது.

மேலும், சகல தரப்பினரதும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தக் கூடியவாறு அதிகாரம் ஓர் இடத்தில் மையப்படுத்தப்பட்டு காணப்படுவது ஆபத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என ஜே.வி.பி யின் செயலாளர் கூறியுள்ளார்.

அத்துடன், நாட்டை ஜனநாயக ரீதியில் வழிநடத்த நிறைவேற்று அதிகாரம் தடையாக உள்ளது எனத் தெரிவித்த ஜே.வி.பியின் செயலாளர், இதற்கு எதிராக தாம் மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (சி)


## யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வெற்றுக்காணி தேவை

பிரசித்திபெற்ற நிறுவனத்திற்கு வெற்றுக்காணி களஞ்சியசாலைக்கு கீழ் காணும் வசதிகளுடன் தேவைப்படுகிறது.

★ யாழ்ப்பாண நகர எல்லைக்குள்

★ .பிரதான வீதி முகப்புடன் கொள்கலன்கள் செல்லக்கூடிய

★ 50 பேர்ச் அல்லது மேல் விரும்பத்தக்கது.

பதிவு செய்வதற்கு
தயவு செய்து கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு. தொடர்பு கொள்ளவும்.
0773219435, 0773295715


# இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு டென்மார்க் அமைப்பு உதவி

யாழ்ப்பாணம், செப்.10

டென்மார்க்கில் இயங்கி வரும் உலகச் சிறுவர் காப்பகம் எனும் அமைப்பு வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவும் பொருட்டு முதற்கட்டமாக இரண்டு இலட்சம் ரூபாவினை சர்வதேச இந்துமத பீடத்திற்கு வழங்கியுள்ளது.

இந்நிதி உதவியினை நலன்புரி நிலையங்களில் வசிக்கும் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தவிரும்பதாகவும் இவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் உதவி மூலம் நேடியாக வழங்கவுள்ளதாகவும் சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் ஆர்.பாபுசர்மா தெரிவித்துள்ளார். (06)

# பௌர்ணமி நிகழ்வை ஒட்டி பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் பௌர்ணமி நிகழ்வில் 27 ஆண்டுகள் சிவப்பணி நிறைவை முன்னிட்டு 2 தையல் இயந்திரங்கள், 30 மீற்றர் துணி, ஒரு கத்தரிக்கோல் ஆகியவற்றை அருட்தந்தை டேமியன் அடிகளாரிடம் கையளிக்கப்பட்டன.

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெண்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டன. உடல் பாதிப்புள்ள 2 பெண்களுக்கு ஐயாயிரம் ரூபா மக்கள் வங்கியில் வைப்புச் செய்த சான்றிதழ்களும் வழங்கப்பட்டன என்று சேவாச்சிரம [illegible] தெரிவித்தார். (204)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 02 . 1939



மறைவு 22 . 08 . 2008

## திருமதி தெய்வநாயகி வீரசிங்கம்

திதி: அபரபக்க ஸஷ்டி (ஆவணி) (10.09.2009)

பெற்றநாள் முதல் பாசங்காட்டி- நம்மை
வாழ்வாங்கு வாழ வைத்து இன்பம் நுகர்ந்து
பெருமையடைந்த எம் குலவிளக்கே!
சொந்தங்களோடு வந்தோரையும்
அரவணைத்து வாழ்ந்த அருமை அம்மாவே!
ஆண்டுகள் பல மறைந்தாலும் உங்கள்
நினைவு என்றும் எம் நெஞ்சங்களில்.

"கௌரிகோட்டம்",
அல்வாய். (88692) குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



அன்னையின் மடியில்: 11.10.1983
கயவரின் பிடியில்: 10.09.2006

அமரர் பாலசுந்தரம்
### அலிஸ்ரன் ராஜ்குமார்
(வைகுந்தன் பேக்கரி உரிமையாளர்)
திதி: தேய்பிறை சதுர்த்தி

ஆண்டுகள் மூன்று சென்றாலும் - உன் நினைவில்
உணர்விழந்து பரிதவிக்கின்றோம்
குடும்பத்தின் குலவிளக்கே - எம்
பாசத்திற்கு உறைவிடமே!
ஆயுததாரியின் உருவில் வந்த காலனினால்
அழுகின்றோம் ஆறுதல் இன்றித் தவிக்கின்றோம்
உன் அரவணைப்பில் வாழ்ந்த - உன்
தாயையும் தம்பி தங்கையையும் பரிதவிக்க விட்டாயே?
சாகும் நேரத்திலும் முகத்தைப் பார்ப்பதற்கு - நாம்
கொடுத்து வைக்க இறைவனும் விரும்பவில்லையே?

(88702)

வைகுந்தன் பேக்கரி,
ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

உன் பிரிவால் துயருறும்:
தாய், தம்பி, தங்கை.

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ 01 ✱ 01 ✱ 1959



கண் நெகிழ 09 ✱ 08 ✱ 2009

## மாணிக்கம் இலட்சியன்

நாள்கள் முப்பத்தி மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவின் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்தும் ஈடாகுமா- உங்கள் அன்புக்கு

(88705)

சிவபதி,
இளவாலை. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேறாத கனா

நெஞ்சில் பல்கோடி நினைவுகள்
நெருஞ்சி முட்களாய் குத்த - அவை
கனவுகளாய் வந்தனவே ஒளிய
நனவுகளாக வரவில்லை - ஏன்
என்தாயின் கனவை நிறைவேற்ற
என்னையே கல்வியில் அர்ப்பணித்தேன் - ஆனாலும்
காட்சி காண ஆவல் கொண்ட என் அன்னையை விட
காலன் கொண்ட பார்வை
நிலை குலைய வைத்தது என்னை - இனி
நினைத்தாலும் நிறைவேறாது என் கனா

**வினி, அல்வாய்.**

## தனிமை

வானம் விரும்பாவிடின்
நிலவு தனிமை !
கடல் விரும்பாவிடின்
அலை தனிமை!



பூ விரும்பாவிடின்
தேன் தனிமை!
பிள்ளை விரும்பாவிடின்
தாய் தனிமை!
உள்ளம் விரும்பாவிடின்
சந்தோசம் தனிமை !
ஆண்டவன்
விரும்பாவிடின்
நாம் அனைவரும்
தனிமை! தனிமை! தனிமை!

**வி. கீர்த்தனா,** மானிப்பாய்.

## கேள்விக்கு என்ன பதில்? - 37 இல் பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு:- **யோ.டஸ்ஸ்ரன்**
தரம் - 09, சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

இரண்டாம் பரிசு:- **புஸ்பராஜா சுமிதா**
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,

மூன்றாம் பரிசு:- **தி.கிருசாந்தி**
மீசாலை கிழக்கு, மீசாலை.

## பாராட்டுப் பெறுவோர்

01) சூ. யோ.மரியதாசன்
அலுக்கை ,அளவெட்டி.
02) சுருதிகா செல்வராசா
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
03) கௌதமி கௌரிதாசன்
கைதடி வடக்கு, கைதடி.
04) மாதவன் நாகதீபிகா
'விமலனகம்', சந்தை வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.
05) ரெ.துஷிமளா
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
06) உ. தக்சாயணி,
பொன்னாலை வீதி, கட்டுடை, மானிப்பாய்.

## கேள்விக்கு என்ன பதில்? -39

உலகிலேயே மிகப்பெரிய சிலை எது?
அது எங்கே இருக்கிறது?

*(சரியான விடையை 17.09.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).*

## வறுமை

எழுதுவென வெள்ளைக்
காகிதங்கள் தேடினேன்
கற்பனையில் ஊறிவரும்
சொற்பன வார்த்தைகளை
செப்பிட முடியாது
செந்தமிழில் வடிக்கவென
தேடி எடுத்த
பேனைகளும்
பாதியில் உயிரற்று
போயினவே!
உயிரற்ற பேனைகளால்
உருவாக்க ஏங்குகின்றேன்
புதுக் கவிதைகள்
உயிர் பெறுமா ...?
கவிதையோடு எந்தன்
வாழ்வும்.

**த. பிரதாப்,**
பொலிகண்டி.



## வாழ்க்கைக்கு வேண்டியவை

1. மதிக்க வேண்டியது
முதுமையானோர், மார்க்கம், சட்டம்.
2. நேசிக்க வேண்டியது
நேர்மை, தூய்மை, உழைப்பு.
3. போற்ற வேண்டியது
அறிவு அழகு, அன்பு.
4. பேணி வளர்க்க வேண்டியது
திருப்தி, தைரியம், மகிழ்ச்சி.
5. தவிர்க்க வேண்டியது
புகைத்தல் , மதுஅருந்துதல் ,சூதாட்டம்.
6. அடக்க வேண்டியது
நா,வேதனை, கோபம்
7. ஆதரிக்க வேண்டியது.
வாக்குறுதி, நட்பு, பண்பு.
8. விரும்ப வேண்டியது.
கருணை, நற்குணம், மன அமைதி.
9. வெறுக்க வேண்டியது.
பெருமை, அநீதி, வாக்குமீறல்.
10. எதிர் கொள்ள வேண்டியது.
கவலை, மரணம், பயணம்.

**ராஜமோகன் தரணியா,**
சங்கத்தானை,சாவகச்சேரி.

## இளவல்கள் வட்டம்

## கேள்விக்கு என்ன பதில்?

-37இன் சரியான விடை
**மல்வானை.**

## சிந்தனைத் துளிகள்

* வரலாற்றின் தடங்களில் வெற்றிபெற்றவனின் பாதங்கள் தோல்வியடைந்தவனின் பாதங்களை மறைத்து விடும்.
* வெற்றி என்பது ஒரு பட்டாம்பூச்சி போன்றது. அது உனக்கு மட்டும் தான் சொந்தமென்று இருப்பாயானால் அது உன்னை முட்டாளாக்கி விட்டுச் சென்றுவிடும்.
* படித்தவர்கள் எல்லோரும் புத்திசாலிகளுமல்ல, படிக்காதவர்கள் எல்லோரும் முட்டாள்களுமல்ல.
* பார்த்தலோமியோவுக்குப் புயலாக இருந்த முனைதான், வாஸ்கொடகாமாவுக்கு நன்நம்பிக்கையாக மாறியது.
* வாழ்க்கையில் நிம்மதியை விரும்புகின்றவன் தனது ஆசைகளையும் துறந்துவிடுவான்.

**தி. கோபிநாத்,** மட்டுவில்.

## என் நெஞ்சத்தின் சில துளிகள்...!

சின்னச் சின்னச் வயசில
நினைத்த போது தூக்கம் வரும்
பள்ளிக் கூட பாடத்தினால்
பாதியாகும் அந்தத் தூக்கம்

காதலிக்கும் வயசில
கண்ணில் ஏது சிறு தூக்கம்
நரைவிழும் வயசில
ஓடிப்போகும் முழுத்தூக்கம்
கடைசித் தூக்கம் தூங்கும்வரை
துன்பங்கள் தூங்க விடுவதில்லை
மழலைப் பூவே நீ தூங்கு
உனக்கே இங்கு முழுத் தூக்கம்.

**G.டனுஷன்,**
கல்வியங்காடு.

## பல்லி எப்படித் தன்னுடைய தோலைக் கழற்றுகின்றது?

பல்லிகளும், பாம்புகளும் காலத்துக்குக் காலம் தங்களுடைய தோலைக் கழற்றுகின்றன. எங்களுடைய தோலும் காலத்துக்குக் காலம் கழன்றுபோகின்றது.



சில நேரங்களில் பல்லி தனது தோலை பற்களால் இழுத்து அதை உண்ணுகின்றது. அது தன்னுடைய பழைய தோலைக் கழற்றும்போது அதனடியில் மினுமினுப்பான புதிய தோல் உருவாகின்றது.

## இளைஞர், யுவதிகளே!


உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-....................................
முகவரி :-....................................
:-....................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வரலாற்றில் இந்த வாரம்

**செப்ரெம்பர் 04**



முதலாவது உலக சாரணர் பாசறை நிகழ்வு 1909 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 4 ஆம் திகதி லண்டனுக்கு அருகில் உள்ள 'கிறிஸ்டல் பிளேஸ்' என்னுமிடத்தில் நடைபெற்றது.

**செப்ரெம்பர் 05**

உலகிலேயே மிக நீளமான பாதாளப் பாதையான 'சென்.கோதார்ட்' வீதி 1980 ஆண்டு செம்ரெம்பர் 5ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பாதாள வீதி சுவிற்சர்லாந்திலிருந்து இத்தாலி வரை செல்கின்றது.



**செப்ரெம்பர் 06**



1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 06 ஆம் திகதி சமூக சேவகரான அன்னை திரேசா இந்தியாவில் காலமானார்.

**செப்ரெம்பர் 07**

உலக குத்துச் சண்டைப் போட்டியில் அதிபாரப் பிரிவில் 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 07 ஆம் திகதி பிரபல குத்துச் சண்டை வீரரான மைக்டைசன் சம்பியன் பட்டம் வென்றார்.



**செப்ரெம்பர் 08**



இப்போது கால்பந்து ரசிகர்களிடையே பிரபல்யம் பெற்று விளங்கும் 'ஆங்கில உதைபந்தாட்ட லீக்' போட்டிகள் 1888 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8 ஆம் திகதி தொடங்கப்பட்டன.

**செப்ரெம்பர் 09**

லத்தீன் அமெரிக்க நாடான மெக்ஸிகோவில் 1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 09 ஆம் திகதி நிகழ்ந்த நில நடுக்கத்தால் 4, 700 பேர் பலியாகினர். 30 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.



**செப்ரெம்பர் 10**



பிரபல ஓவியரான 'பிக்காசோ' வரைந்த 'குவெர்னிக் [ஸ்பெயின் நகரம்] என்ற ஓவியம்' 1981 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10 ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து ஸ்பெயினுக்குக் கொண்டுவரப்பட்டது. ஸ்பெயினில் ஜனநாயகம் ஏற்படும்வரை இந்த ஓவியத்தை அங்கு கொண்டு செல்லக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியர்களிடம் இருந்து 50 ரூபா வீதம்

## விடுமுறை விடுதி அமைக்க அறவிட்ட நிதியை பாதுகாப்பு நிதிக்கு வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.10

நாட்டில் உள்ள ஓய்வூதியர்களிடமிருந்து ஓய்வூதியர் விடுமுறை விடுதி அமைப்பதற்கு ஓய்வூதியர்களின் சம்மதத்துடன் தலா 50 ரூபா வீதம் அறவிடப்பட்ட நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்குவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஓய்வூதியர்கள் விடுமுறை காலத்தில் தங்குவதற்கு நுவரெலியாவில் விடுதி அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட ஒவ்வொரு ஓய்வூதியரின் சம்மதத்துடன் தலா 50 ரூபா வீதம் ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்பட்டது.

தற்போது இந்த நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (203-207)

## இராமாவில் நலன்புரி நிலைய பாடசாலைக்குத் தளபாடம்

யாழ்ப்பாணம், செப்.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலைக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான மேசைகளும் கதிரைகளும் வழங்கப்பட்டுள்ளன. கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினர் தளபாடங்களைப் பாடசாலை அதிபரிம் கையளித்தனர். (203-207)

## தவறவிடப்பட்ட பணம் உரியவரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், செப் 10

ஆலய வளாகத்தில் அமைந்துள்ள தேநீர்க் கடையில் தவறவிடப்பட்டுள்ள 34 ஆயிரம் ரூபா பணம் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடை உரிமையாளரான சண்முகம் குமாருவால் தவறவிடப்பட்டுள்ள பணம் கண்டெடுக்கப்பட்டு பணச் சொந்தக்காரரான மாணிக்கம் பாலச்சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (201)

## நலன்புரி நிலைய மாணவருக்குச் சத்துணவு

யாழ்ப்பாணம், செப்.10

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு நாளை சத்துணவு வழங்கப்படவுள்ளது.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினர் சத்துணவு மாவினை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)


Maths/Bio/Commerce/Arts எப்பிரிவிலேனும் A/L செய்தவரா நீங்கள்?

நீங்களும் செய்திடலாம் BIT Degree !



BIT Bachelor of Information Technology [BIT] (University of Colombo)

அதிசிறந்தவற்றையே தருகிறோம். ஏனெனில் நீங்கள் எம்மவர்கள் !

உடன் தொடர்பு கொள்ள: 0772365461, 0772365460

IDM

IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.


## WANTED POSITIONS IN JAFFNA

A leading Sri Lankan conglomerate seeks the following personnel for their showroom cum office in Jaffna.

**Executive in Charge of Jaffna Centre**

We are looking for a dynamic and team spirited candidate to be based in Jaffna to be in charge of our Office cum Showroom and to develop the newly established business unit in Jaffna.

The ideal candidate would have experience in a commercial environment. The candidate should be an energetic and self motivated person around 30 years with at least 5-10 years executive working experience, with good communication skills in English and Tamil. Ability to communicate in Sinhala would be an advantage. The candidate should have a high computer literacy level, be customer focused and will be responsible for key client / account management and services and have excellent interpersonal skills .The person should have passed the GCE A/Ls and a Credit pass for Mathematics and English at the GCE O/L examinations. A marketing qualification would be an added advantage.

**Customer Service Assistant / Executive of Jaffna Centre**

We are looking for a dynamic and enthusiastic female candidate to be based in Jaffna with good communication skills in English and Tamil to assist the Executive in charge of the office cum showroom and to assist in developing the newly established business unit in Jaffna.

The candidate should have a good computer literacy level, customer focus person below 30 years in age,with at least 5 years customer service experience. The person should have a minimum of 2 passes at the GCE A/L and a Credit pass for Mathematics and English at the GCE O/L examinations.

For more information please contact 0772620974 / 0773033801

APPLY WITHIN 7 WORKING DAYS BY E-MAIL TO careers@hayleys.com OR, BY POST TO THE GENERAL MANAGER, HR MANAGEMENT DIVISION, HAYLEYS LIMITED, 25 FOSTER LANE, COLOMBO 10. ENVELOPE SHOULD BE MARKED WITH THE POSITION APPLIED FOR. www.hayleys.com (88721)

## கண்ணீர் அஞ்சலி

எம்முடன் கடமையாற்றும்

திருமதி கீதா கிளன்சியஸ் லொயலாஸ்

அவர்களின் அன்புத் தாய்

அன்னலெட்சுமி திருச்செல்வம்



அவர்களது மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அவருக்கு எமது துயரம் நிறைந்த கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் பெரும் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
மக்கள் வங்கி,யாழ்.பல்கலைக்கழகக் கிளை.

(88716)

## தவறிவிட்டது

இல.17, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய நாகலிங்கம் யோகராஜா என்பவருடைய (633542198V) இலக்கமுடைய தே.அ.அ., விசேட அ.அ., சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கல்வியங்காட்டிற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறித்த முகவரியுடன் அல்லது அவரது பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.: 0776845799,
060 2006028. (88719)

# மரண அறிவித்தல்



## சண்முகநாதன் சந்துதன்

யாழ்.ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி நிர்வாகி சண்முகநாதன் அருள்நங்கை தம்பதியரின் அருமைப் புதல்வன் சண்முகநாதன் சந்துதன் (புனித ஜோண் பொஸ்கோ, 4ஆம் ஆண்டு மாணவன்) 08.09.2009 செவ்வாய்கிழமை இரவு காலமாகி விட்டார்.

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2009) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக காக்கைதீவு, கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் புதிய உயர்கல்லூரி மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை.
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

(சி/569839)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவுநகர் சோழங்கன் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் 'பான்ட்' வாத்திய அணி வகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், ஈ.பி.டி.பியின் பருத்தித்துறைப் பிரதேச பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கிளையை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம். *(படங்கள்: எஸ்.ஜி.மூர்த்தி)*

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,செப்.10

வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறும்.

தேர்த்திருவிழாவன்று மாலை 5 மணிக்கு பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம் பெறும். (204- 72)

* * *

குருநகர்,செப்.10

யாழ். அஞ்சணந்தாழ்வு கொலை விளக்கி மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு நடைபெற உள்ளது.

நற்கருணைநாதர் வழிபாடு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5மணிக்கு நடைபெறும். (204-51)

* * *

கைதடி, செப்.10

கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுதர்சனஹோமம் நடைபெறவுள்ளது. அடியார்களை இந்த ஹோமத்தில் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (201-288)

## வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.10

வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சமூகநலத்துறைத் திட்ட இணைப்பாளர் த.கிருபாகரன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் ''விழிப்புலனற்றோரின் வளமான வாழ்வில் கணனியின் பங்கு'' என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரி கணனி அலகுப் பொறுப்பாசிரியர் த.அகிலன் விரிவுரையை நிகழ்த்துவார்.

வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கு.நக்கீரன் குழுவினரின் புல்லாங்குழல் இசையரங்கு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (203-55)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் மகாகவி பாரதி விழா

யாழ்ப்பாணம், செப்.10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் மகாகவி பாரதி விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு மேற்படி கல்லூரியின் 'ஒற்லி' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். ஆசியுரையை யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் முதல்வர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் வழங்கவுள்ளார்.

அன்றையதினம் பட்டிமன்றம், நாட்டியநடனம், நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (204)

## யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின்கீழ் மூன்று கூட்டுறவு நகர்கள்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்று சிறிய கூட்டுறவு நகர்களை விரைவில் திறந்து வைக்கவுள்ளது.

நல்லூர் 12ஆம் இலக்கக் கிளையிலும், நாவாந்துறை முதலாம் இலக்கக் கிளையிலும், குருநகர் 32ஏ இலக்கக் கிளையிலும் இந்தக் கூட்டுறவு நகர்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

பிரதேச மக்களின் வசதி கருதி ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்த மூன்று கூட்டுறவு நகர்களையும் துரித கதியில் திறந்து வைப்பதற்கு சங்கம் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. (203-224)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நடமாடும் சேவை மூலம் பயனடையவுள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு

யாழ்ப்பாணம், செப்.10

மாவட்ட ரீதியாக நாளை மறுதினம் சனி மறுநாள் ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் பின்வரும் சேவைகளைப் பெற விரும்புவோர் இன்று வியாழக்கிழமை உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பித்து மோட்டார் வாகனப் பதிவுப் புத்தகம், சாரதி வாகன அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், வாகன இலக்கத்தகடு ஆகியன கிடைக்கப் பெறாதோர், மற்றும் இதனோடு தொடர்புடைய ஏதேனும் பிரச்சினைகள் கொண்டிருப்போர் தமது பிரச்சினை தொடர்பான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதே காலப்பகுதியில் தேசிய அடையாள அட்டைபெற விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப் பெறாதோர் மற்றும் விண்ணப்பித்து இதுவரை ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதோர் அல்லது ஓய்வூதியம் தொடர்புடைய ஏதேனும் பிரச்சினைகள் கொண்டிருப்போர் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள் செய்யாதோர், இதுவரை பிறப்புப் பதிவு செய்யாதவர்கள், இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பிறப்பைப் பதிவு செய்து இதுவரை சான்றிதழ் கிடைக்கப் பெறாதோர், 2008ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ கடவுச் சீட்டுப்பெற விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப் பெறாதோர் ஆகியோரை இன்று வருகை தருமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (203-201)

## வலி. கிழக்கில் 'நிஷா'வால் பாதிக்கப்பட்டோர் இழப்பீடு பெற்றுத்தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.10

வலி.கிழக்குப் பிரதேசத்தில் 'நிஷா' அனர்த்தத்தின் போது இறந்த கால்நடைகளுக்கான நஷ்டஈட்டு கொடுப்பனவை தந்து உதவுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோப்பாய் கால்நடை வளர்ப்போர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் இது தொடர்பான கடிதம் ஒன்றை யாழ்.அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

'நிஷா' புயல் மற்றும் கடும் மழை போன்றவற்றின் தாக்கத்தால் வலி.கிழக்கில் பெரும் எண்ணிக்கையான வளர்ப்பு மாடுகள், ஆடுகள், கோழிகள் போன்றன இறந்துள்ளன.

இவற்றிற்கு இதுவரை எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இந்த கால்நடை வளர்ப்பைத் தமது சுயதொழிலாக மேற்கொண்டு வாழ்ந்த மக்கள் தமது இழப்புக்கு ஏற்ற தொகையை பெற்றுத் தருமாறு கோரியுள்ளதாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (203-224)

## உடுவில் மகளிர் மாணவரின் பெற்றோர்களுக்குக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.10

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களின் பெற்றோருக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச்சிவன் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கல்லூரி மாணவர்களின் 'கல்விசார் செயற்பாடுகளும் எதிர்காலமும்' என்ற விடயம் கலந்துரையாடப் படவுள்ளதால், தரம் ஒன்று தொடக்கம் ஜி.சீ.ஈ உயர்தரம் வரை கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரையும் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## முன்பள்ளிகள் அரசினால் அங்கீகரிக்கப்படாமையால் ஆசிரியர்கள் நெருக்கடிக்கு மத்தியில் கடமையாற்றுகின்றனர்

### இது வேதனைக்குரியது என்கிறார் 'போரூட்' நிறுவன அலுவலர்

யாழ்ப்பாணம்,செப்.10

சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டும் முன்பள்ளிகள் இன்னமும் அரசினால் அங்கீகரிக்கப்படவில்லை.

இதனால் பல சிரமங்களின் மத்தியில் கற்பிக்கும் ஆசிரியைகள் குறைந்த வருமானத்தில் தமது கல்விப் பணியினை மேற்கொள்வது வேதனைக்குரியது.

பாடசாலைகளில் அரிவரி கல்வி முறை நீக்கப்பட்ட காலம் தொடக்கம் ஊருக்கு ஊர் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

அன்று தொடக்கம் ஆரம்பக் கல்வியை கல்வியின் ஒவ்வொரு படிக்கற்களையும் கடக்க வைப்பது முன்பள்ளி ஆசிரியைகளே.

வீட்டில் சிறைப் பறவைகளாக வாழும் இளம் சிறார்கள் முழுமையான சுதந்திரம் பெற்று அதன்மூலம் வெளி உலக அனுபவங்களை, கூட்டுச் செயற்பாடுகளை, விளையாட்டுக்களை, எழுத்துக்களை, தலைமைத்துவத்தை அறிகின்ற இடம் முன்பள்ளியே.

அவ்வாறு கற்பிக்கப்படும் அத்திபாரக் கல்வியே மாணவனைச் சிறந்த கல்வியாளனாக மாற்றுகிறது.

இவ்வாறு சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழாவில் போரூட் நிறுவன யாழ்.மாவட்ட மனிதநேய உதவிப்பிரிவு தொழில்நுட்ப அலுவலர் கிருஷ்ணானந்தமூர்த்தி நந்தகுமார் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சங்கத்தானை சனசமூக நிலையத் தலைவர் சி.கமலரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பள்ளிகளுக்கு மனிதநேய உதவிகளை மேற்கொள்கின்றன.

வழங்கப்படும் உதவிகள் கூட முன்பள்ளி சிறார்களுக்கே வழங்கப்படுகின்றனவே தவிர அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

தமது பிள்ளைக்கு வழங்கப்படும் கல்விக்கு ஒரு தொகை பணத்தை மாதாந்தம் கொடுப்பதுடன் அவர்களது கடமை முடிந்துவிடுவதாக நினைக்கிறார்களே தவிர இந்த முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியைகள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்குத் தீர்வு காணும் செயற்பாடுகளை மேற்கொள்வதில்லை.

இன்றைய வாழ்க்கைச் செலவீனங்களை எடுத்துப் பார்க்கும் போது அவர்களுக்கு கிடைக்கும் வருமானம் மிகமிகக் குறைவு.

இதனால் நாட்டில் உள்ள அனைத்து முன்பள்ளிகளும் அரசினால் அங்கீகரிக்க அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் உரையாற்றுகையில்

பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்த யாழ்.மாவட்ட மக்களுக்கு 'நிஷா' வினால் மேலும் நெருக்கடிக்குத் தள்ளப் பட்டனர்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு பல மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் மாவட்டத்தில் 'நிஷா' வினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளிகளை புனரமைக்க 'போரூட்' நிறுவனத்தினர் முன் வந்து எமது திணைக்கள உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் அந்தந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடனும் தமது திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையிட்டு எமது திணைக்களத்தினர் இந்த நிறுவனத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர் - என்றார்.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்), தென்மராட்சிப் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சி.இரகுநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Colombo Opticians

கணனி மூலம் கண் பரிசோதனையும் குறைந்த விலையில்
கண்ணாடி வழங்கலும். கண் குறைபாடு உள்ளவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

கடந்த 8 வருடகாலமாக யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து தமது சேவையை சிறந்த முறையில் நடத்தி வரும் கொழும்பு ஒப்டிசியன்ஸ் நிறுவனத்தினர் 15.09.2009 தொடக்கம் யாழ். மாவட்டத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் வருகை தந்து தங்களது கண்களை நவீன இலத்திரனியல் (கணனி) மூலம் பரிசோதனை செய்து குறைந்த விலையில் கண்ணாடி வழங்க உள்ளனர். இதில் கண்குறைபாடு உள்ளவர்கள் சகலரும் பங்கு பற்றிப் பயன் பெறலாம். யாழ்.மாவட்டத்தில் சகல இட மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சகலருக்கும் விலைக் கழிவு உண்டு.**

சங்குவேலிவடக்கு,மானிப்பாய்
T.P.0716142252,
0715393963, 0777166390

R.NAVANEETHARAJH
Director
Colombo opticians.

(88732)


## தவறிவிட்டது

புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியுடைய கைலாசபிள்ளை வசந்த மலர் என்பவரது தே.அ.அ இலக்கம் (695412137V) புதுமடத்துக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப் படைத்துதவவும். (88715)

## கண்ணீர்க் காணிக்கை



புதிய உயர்கல்லூரி நிர்வாக இயக்குநர் திரு.திருமதி
சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் ஏக புத்திரன்
**செல்வன் சந்துதன்**
அவர்களின் தீடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(88725) புதிய உயர்கல்லூரி மாணவர்கள்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1120 நிலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் 07 25 31 45

08-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 4,640,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 217,918 | 20/- | 4,358,360/- |
| 2 இலக்கங்கள் | 20,074 | 40/- | 802,960/- |
| 1 இல. + லக்கினம் | 19,880 | 60/- | 1,192,800/- |
| 2 இல. + லக்கினம் | 1,807 | 200/- | 361,400/- |
| 3 இலக்கங்கள் | 548 | 1000/- | 548,000/- |
| 3 இல. + லக்கினம் | 38 | 10,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,640,700/- | - |
| மொத்தம் | | | 8,043,520/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 260,272 | | 8,543,520/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,615,450/-

ஆலிந்தயே வாசனாவ

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

| | |
|---|---|
| கொழும்பு | 400496895-4-18 |
| அம்பாறை | 400488534-9-12 |
| கொழும்பு | 400489800-0-43 |
| மாத்தளை | 400482408-9-09 |
| கம்பஹா | 400498204-9-26 |


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்10

IDM Affiliated university College நடத்தும் கணனி மற்றும் வணிக முகாமைத்துவ பட்டப் படிப்புகள் தொடர்பான இலவச கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி சிவன் கோயிலடியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் துறைப் பேராசிரியர் கந்தசாமி கலந்து கொள்வார். (201)

## கிருஷ்ண ஜெயந்தி

வடமராட்சி,செப்.10

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நடைபெறும்.

பகல் விசேட பூஜை, அபிஷேகங்களுடன் ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம்பெறுவதுடன், நள்ளிரவு 12மணிக்கு கண்ணன் பிறப்புத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து தாலாட்டுப் பாடல், விசேட நிகழ்வு என்பனவும் நடைபெறும். (203-236)

* * *

வடமராட்சி,செப்.10

அல்வாய் வடக்கு, வியாபாரி மூலை ஆதிசிவ வீரபத்திரர் சுவாமி கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறும்.

அன்றைய தினம் காலைமுதல் மாலை வரை விசேட பூஜைகள், அபிஷேகங்கள் இடம் பெறவுள்ளன. (203- 236)

## விவசாயக் கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 15 விவசாயக் கிணறுகள் யு.என்.டி.பி நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் உள்ள பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியேறி விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் 79 விவசாயக் குடும்பங்களின் விவசாய உற்பத்தி அதிகரிக்கும் நோக்குடன் இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென 13 லட்சத்து 48 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (203-51)



எழுவை தீவில் அமைக்கப்பட்ட மினி கோப்சிற்றி திறப்பு விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றன.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக் கணக்காளர் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் சங்கத் தலைவர், உப தலைவர், எழுவை தீவுக் கிளைக் குழுத் தலைவர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.


1000ற்கு மேற்பட்ட மாணவர்களை BIT பட்டப்படிப்பிற்கு தயார்படுத்திய ஆசிரியர் குழாம் யாழ் மண்ணில்........

A prestigious Degree from University of Colombo

BIT

Bachelor of Information Technology
[BIT]

உடன் தொடர்பு கொள்க: 0772365461, 0772365460

IDM

IDM Jaffna - No.216, Navalar Road, Jaffna.



SHAMROCK
ஈச்சமோட்டை,
யாழ்.

- Gr 1முதல் 11 வரை
- O/L 2ஆம் முறை
- புலமைப்பரிசில் (Gr 4) பரீட்சைகளுடன்
- Gr 5க்கு விசேட வகுப்புகள்
- Eng.Med. Gr 6 To 11
- Literature I.C.T Class
- சிங்களம்
- Spoken English

(புதிய பிரிவுகள்)

(88718)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
க.வடிவேல்
அவர்களின் அன்பு மாமியார்
**அமரர் மார்க்கண்டு பொன்னம்மா**
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், நல்லூர். (88730)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்

(முன்னாள் உரிமையாளர் C.S. கணபதிப்பிள்ளை அன்சன்ஸ் மருந்துக்கடை, யாழ்ப்பாணம்
தற்போதைய உரிமையாளர் C.S. கணபதிப்பிள்ளை அன்சன்ஸ், நல்லூர்)



78, சட்டநாதர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் 07.09.2009 திங்கட்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் திரவியம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வமலரின் பாசமிகு கணவரும் சற்சொரூபன் (கொமர்ஷல் வங்கி, மட்டக்களப்பு), பகீரதன் (சீ.எஸ். கே.மருந்துக்கடை, நல்லூர்), கிரிதரன் (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரசாந்தியின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற சட்டநாதன் மற்றும் சந்தானகோபால், குலநாயகி, தனபாக்கியலட்சுமி, நல்லநாதன் ஆகியோரின் சகோதரனும் செல்வராஜா (அவுஸ்திரேலியா), கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), சச்சிதானந்தம் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), சந்தானமலர், ராமநாதன் (கனடா), ஞானசம்பந்தர் (அவுஸ்திரேலியா), யோகமலர் (சுவிஸ்), காந்தமலர் (அவுஸ்திரேலியா), யோகலிங்கம் (ஜேர்மனி), புஷ்பமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான அன்பழகன், பொன்னம்மா மற்றும் வாலாம்பிகாதேவி, தனலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் கோபாலசிங்கம், கலைச்செல்வி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.09.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப. 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**78, சட்டநாதர் வீதி,
நல்லூர்.**

(88729)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தத்தால் துருக்கியில் 18பேர் பலி; வீடுகள் பலத்த சேதம்

இஸ்தான்புல், செப். 10

துருக்கியில் இடைவிடாத அடைமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கிற்கு இதுவரை 18 பேர் பலியாகியுள்ளனர். அதேவேளை, பல பகுதிகளில் அநேக சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

வட-மேற்குத் துருக்கியில் வெள்ள அனர்த்தங்களுக்கு ஆறு பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள். எனினும், தலைநகரான இஸ்தான்புல்லின் புறநகர்ப் பகுதிகளில் அநேக சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இஸ்தான்புல்லின் சர்வதேச விமான நிலையத்துக்கருகிலுள்ள நெடுஞ்சாலை நீரில் மூழ்கியுள்ளது. பல இடங்களில் கார்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. சில சாரதிகள் தத்தம் காருக்குள் சிக்குண்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைநகரான இஸ்தான்புல்லும் நீரில் மூழ்கி வருகிறது. கூரைகள் மீது ஏறியிருந்த மக்கள் இராணுவ ஹெலிக்கொப்டெர்களால் மீட்கப்பட்டார்கள். மூழ்கியுள்ள கார்களிலுள்ளவர்களை மீட்கும் பணியில், படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த அசம்பாவிதங்கள் அரச தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டன.

அதேவேளை, வட-மேற்கு துருக்கியில் நெடுஞ்சாலைகள், வீடுகள், விவசாய நிலங்கள் ஆகியவை வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. இரு பாரிய பாலங்கள் இடிந்து விழுந்துள்ளன. சாரே நகரில் ஆறுபேர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டார்கள் என ஊடகங்கள் தெரிவித்தன.

இடைவிடாத அடைமழையால் இந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த 80 வருடங்களில் இப்போதுதான் முதன்முறையாக இஸ்தான்புல்லின் பல பாகங்கள் மோசமான வெள்ளப்பெருக்கால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன என காலநிலை அவதானிப்பு மையம் தெரிவித்தது.

வட-மேற்கு துருக்கியில் இந்த இடைவிடாத அடைமழை நீடிக்கலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாரே நகரில் வீடொன்று இடிந்து விழுந்துள்ளது. இடிபாடுகளுக்கிடையி லிருந்து ஒரு தாயினதும், அவரது மூன்று புதல்விகளினதும் சடலங்கள் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளன.

# தென் அமெரிக்காவில் புயல் அனர்த்தம்: 14 பேர் உயிரிழப்பு; கட்டடங்கள் சேதம்

வாஷிங்டன், செப். 10

தென் அமெரிக்கப் பிராந்தியத்தில் ஏற்பட்ட கடும் புயலால் சுமார் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆர்ஜன்டீனா, பிரேஸில் ஆகிய நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்தப் புயலால் பல கட்டடங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளன. மரங்கள் முறிந்தும் வேரோடு பிடுங்கியும் எறியப்பட்டுமுள்ளன.

ஆர்ஜன்டீனாவில் குறைந்தபட்சம் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்புயலால் பரகுவேயிலுள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளன. ஆர்ஜன்டீனாவின் சன்டா ரொஸா, தபுனா, போசோ அஸூல், ரிகார்டோ வெசல்கா ஆகிய நகரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன.

## வேலையற்றோரின் எண்ணிக்கை சுவிஸில் 1,50,000 ஆக உயர்வு

சூரிச், செப். 10

சுவிட்சர்லாந்தில் வேலையற்றோரின் எண்ணிக்கை 1,50,000 ஆக உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்குப் பின்னர் பதிவான மிக அதிகமான வேலையற்றோர் தொகை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

15 முதல் 24 வயதுடைய இளைஞர், யுவதிகளே அதிகளவில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் சுவிஸில் அல்லறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 4 விஞ்ஞானிகளுக்கு பல்ஸான் விருது

சூரிச், செப். 10

சுவிட்சர்லாந்து விஞ்ஞானி உள்ளிட்ட நான்கு பேருக்கு இந்த ஆண்டுக்கான பல்ஸான் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஒரு சுவிட்சர்லாந்து பிரஜை, இரண்டு பிரித்தானியர்கள், ஓர் இத்தாலியர் ஆகியோருக்கு இம்முறை பல்ஸான் விருது வழங்கப்பட்டுள்ளது.

முதுபெரும் இத்தாலிய எழுத்தாளர் பல்ஸானின் பெயரில் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பல்ஸான் விருதுபெற்ற நான்கு பேருக்கும் தலா 10 இலட்சம் சுவிஸ் பிராங்குகள் ரொக்கப் பணமாக வழங்கப்படும்.

# பாகிஸ்தானுக்கு அணு ஆயுத மூலப்பொருள்: இலங்கை முஸ்லிம்கள் மூலமே கிடைத்ததாம்

## அந்நாட்டு விஞ்ஞானி கான் திடுக்கிடும் தகவல்

டுபாயில் வாழும் இலங்கை முஸ்லிம்களே அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களையும் உபகரணங்களையும் பாகிஸ்தானுக்கு விநியோகித்துள்ளனர் என்று பாகிஸ்தானிய அணு விஞ்ஞானி ஏ.கியூ. கான் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

டுபாயில் வாழும் இலங்கை முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு மட்டுமன்றி லிபியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கும் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருள்கள் மற்றும் உபகரணங்களை விநியோகித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பாகிஸ்தானிய அணு விஞ்ஞானி கான் பாகிஸ்தானிய வானொலி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவர் இவை குறித்து மேலும் தெரிவிக்கையில் -

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்களை ஐரோப்பிய நாடுகளிலிருந்து பாகிஸ்தான் பெற முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது நாம் டுபாயிலுள்ள கம்பனி ஒன்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்களையும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தோம். அந்த டுபாய் கம்பனி இலங்கை முஸ்லிம்களுடையது. - என்றார் அவர். (அ-சி)

# ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அமைச்சுச் செயலாளர் பதவி?

கொழும்பு, செப். 10

கூட்டுப் படைகளின் சிரேஷ்ட அதிகாரியும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகா சர்வதேச வர்த்தக மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட உள்ளார் என்று இணையத்தளத்தில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

சர்வதேச வர்த்தக மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சராக பேராசிரியர் ஜி.எஸ்.பீரிஸ் உள்ளார். அந்த அமைச்சின் செயலாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை நியமிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார் என்று சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரை மேற்கோள்காட்டி அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச வர்த்தக மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் செயலாளராகப் பதவியை வகித்துவந்த எஸ்.ரணுகே அப்பதவியிலிருந்து கடந்த வாரம் திடீரென நீக்கப்பட்டுவிட்டார்.

இந்த நிலையில், ஜெனரல் சரத் பொன்சேகாவை அந்தப் பதவிக்கு நியமிக்கவேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணிக் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதியைக் கோரி இருக்கின்றார் என்றும் -

அக்கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் என்றும்-

விமல் வீரவன்ஸ எம்.பியை மேற்கோள் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன.

அதேநேரம் பாதுகாப்பமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படும்போது பாதுகாப்பு அமைச்சுப் பதவியை ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கவும் ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்றும் விமல் வீரவன்ஸ எம்.பியை மேற்கோள்காட்டி செய்திகள் கசிந்துள்ளன.

# வன்னி அகதிகள் மற்றும் திஸநாயகத்தின் விடுதலைக்கு ஒபாமா குரல் தர வேண்டும்

## அமெரிக்க நாளிதழின் ஆசிரிய தலையங்கத்தில் வலியுறுத்து

வாஷிங்டன், செப். 10

இலங்கையில் இருபது வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸநாயகத்தின் விடுதலைக்காகவும், இலங்கையில் வன்னி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளின் விடுதலைக்காகவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குரல் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்க நாட்டு ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை ஒன்று அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை விவகாரம் குறித்து தீட்டிய ஆசிரியர் தலையங்கத்திலேயே 'த பொஸ்டன் குளோப்' (The Boston Globe) என்ற அமெரிக்க நாட்டு ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இனங்களுக்கு இடையில் அமைதியீனத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டுரை எழுதியவர் என்ற காரணத்துக்காக ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கும் அப்பத்திரிகை, உண்மையில் தமிழ் அகதிகளை முகாம்களில் அரசு அடைத்து வைத்திருப்பதன் மூலமே இலங்கையில் இனங்களுக்கிடையில் அமைதியீனங்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மே 03ஆம் திகதி இடம்பெற்ற சர்வதேச ஊடகவியலாளர் தினத்தின் போது ஊடகவியலாளர்கள் மீது பல நாடுகளிலும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் பற்றிப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி, இலங்கையில் ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமையை இவ்வன்முறைகளுக்கு ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டிருந்தார் என்றும் பத்திரிக்கை அப்பத் திரிகை, தமிழ் ஊடகவியலாளர் திஸநாயகத்தின் விடுதலை, வன்னி முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளின் விடு தலை ஆகியவற்றுக்காக அமெரிக்க ஜனா திபதி குரல் கொடுக்க வேண்டுமென்றும் என்றும் 'பொஸ்டன்குளோப்' பத்திரிகை கோரியுள்ளது.

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வுப் பிரச்சினை: இரு தரப்பினரும் இன்று மீண்டும் கொழும்பில் பேச்சு

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக மீண்டும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்கங்களுக்கும் இடையே இன்று மாலை 4.30 மணியளவில் கொழும்பில் பேச்சுகள் இடம்பெறவிருக்கின்றன.

ஏற்கனவே இரண்டு சுற்றுக்கள் நடைபெற்ற இந்தப் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தமையை அடுத்து, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஏழாவது நாளாக நேற்றும் தமது ஒத்துழையாமைப் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இந்த நிலையிலேலேயே முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் கனிஷ்ட வீரசிங்க, மேற்படி கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்கங்களை மீண்டும் இன்று பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

இந்தப் பேச்சுகளில் கூட்டு ஒப்பந்தத் தொழிற்சங்கங்களின் சார்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்கக் கூட்டுக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இ.தொ.கா. சார்பில் அமைச்சர் தொண்டமான், பிரதி அமைச்சர்களான முத்து சிவலிங்கம், ஜெகதீஸ்வரன் மற்றும் ஹரிச்சந்திர சேகர, ஆர். யோகராஜன் ஆகியோரும் -

இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் சார்பில் வேலாயுதமும் -

பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் குழுவின் சார்பில் எஸ்.ராமநாதனும் - கலந்துகொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 114 இலங்கையர் மலேசியாவில் கைது!

## ஆஸி. செல்ல திட்டமிட்டிருந்தவர்களாம்

கோலாலம்பூர், செப். 10

மலேசியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்தவர்கள் அல்லது அங்கு சட்டவிரோதமாகத் தங்கியிருந்தவர்கள் என்று கூறப்படும் 114 இலங்கையர்கள் மலேசிய நாட்டுப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் மலேசியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இந்தோனேஷியா ஊடாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார்கள் என்று மலேசியப் பொலிஸார் நம்புகின்றனர்.

மலேசியப் பொலிஸார் இவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்த ஆடம்பர கட்டடத் தொகுதியை சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் முற்றுகையிட்டுள்ளனர்.

இலங்கையர் 114 பேருடன் சேர்த்து இரு இந்தியர்களும் அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டுப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் மேலும் தெரியவந்துள்ளது.

# பொலிஸ் காவலில் இருந்த வேளை 91 பேர் இந்த ஆட்சிக் காலத்தில் மரணம்

## அமைச்சர் வெளியிட்ட புள்ளி விவரம் இது

கொழும்பு, செப்.10

2005ஆம் ஆண்டு முதல் இப்போது வரை பொலிஸ் காவலில இருந்தபோது 91 சந்தேக நபர்கள் மரணமடைந்துள்ளனர் என்று அரசின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தனா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, ஜே.வி.பியின் எம்.பி [illegible] நிபுணாராய்ச்சி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

2005 இல் 02 பேரும், 2006 இல் 11 பேரும், 2007 இல் 20 பேரும், 2008 இல் 26பேரும் மற்றும் 2009 இல் இப்போதுவரை 32 பேருமாக மொத்தம் 91 பேர் இவ்வாறு மரணமடைந்துள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையின் தாக்குதலை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## தமிழக மீனவர்களிடம் ராகுல் காந்தி உறுதியளிப்பு

நாகர்கோவில், செப் 10

தமிழக மீனவர் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயம் குறித்து மத்திய அரசின் சம்பந்தப்பட்ட துறைகளிடமும், மத்திய அமைச்சரவையிலும் பேசி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு தமிழகம் வந்திருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி உறுதியளித்தார்.

தமிழ்நாட்டில் 3 நாட்கள் சுற்றுப் பயணத்தை தொடங்கிய ராகுல் காந்தி நாகர்கோவிலில் நேற்றுமுன்தினம் குமரி மாவட்ட மீனவ இளைஞர்கள், இளம்பெண்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது பலரும் தங்களது கோரிக்கைகள், தேவைகள் பற்றி எடுத்துரைத்தனர்.

நடுக்கடலில் இலங்கை கடற்படையால் மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை தடுக்க வேண்டும்.

மத்திய அரசில் மீனவ சமுதாயத்துக்கு தனி அமைச்சகம் அமைக்கப்பட வேண்டும். மீனவர்களுக்கு டீசல், மண்ணெண்ணை போன்ற எரிபொருள்களை மானிய விலையில் வழங்க வேண்டும்.

விவசாயிகளுக்கு கடன்களை தள்ளுபடி செய்ததைப் போல மீனவர்களுக்கும் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் வெளிநாட்டு கப்பல்கள் இந்திய கடல் பகுதியில் மீன் பிடிப்பதைத் தடுக்க வேண்டும் என்பன போன்ற பல கோரிக்கைகளை இளைஞர்கள் தெரிவித்தனர்.

இவற்றுக்குப் பதில் அளித்த போதே ராகுல் காந்தி மேற்கண்ட உறுதிமொழியை அளித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

மத்திய அரசின் சம்பந்தப்பட்ட துறைகளிடமும், மத்திய அமைச்சரவையிலும் இது குறித்து பேசி தக்க நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படும்.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற தொல்லைகள் குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தான் கடற்படையினரால் ஏற்படுகிறது. எனவே, இந்த 2 நாடுகளின் பிரச்சினைகள் பற்றியும் அமைச்சரவையில் சொல்லி நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வேன்.

நான் இளைஞர் காங்கிரஸில் இருந்தபோது குஜராத் சென்றிருந்தேன். அப்போது மீனவர்களை அங்கு ஒதுக்கி வைத்திருந்தனர். அப்போதுதான் மீனவர்களின் நிலையை நான் உணர்ந்தேன். குமரி மாவட்டமும் மீனவர்கள் அதிகமாக வாழும் மாவட்டம். எனவே தமிழ்நாட்டில் எனது சுற்றுப்பயணத்தை முதன்முதலில் குமரி மாவட்டத்தில் தொடங்கியுள்ளேன்.

விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளிகள் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தால்தான் நாடு உயரும். இந்தியா வல்லரசாகும் - என்றார்.


## நடுக்கடலில் மீனவர் மோதல்

நெல்லை அருகே உள்ள இடிந்தகரை கிராம மீனவர்களுக்கும், தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம் மீனவர்களுக்கும் இடையே கடந்த திங்களன்று நடுக்கடலில் கடும் மோதல் வெடித்தது.

கடந்த திங்களன்று இடிந்தகரை மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக கடலில் வலை விரித்திருந்தனர். அப்போது இயந்திர படகில் வந்த தருவைக்குளம் மீனவர்கள், அங்கு விரிக்கப்பட்டிருந்த ரூபா 2 லட்சம் மதிப்பிலான வலையைச் சேதப்படுத்தினர்.

இதனால் ஆத்திரமடைந்த இடிந்தகரை மீனவர்கள் வாக்குவாதம் செய்தனர். இரு தரப்பினருக்கும் நடுக்கடலில் மோதல் வெடித்தது. அப்போது தருவைகுளத்தைச் சேர்ந்த 41 பேரை இடிந்தகரை மீனவர்கள் சிறைப்பிடித்துக் கரைக்கு அழைத்து வந்தனர்.

தகவலறிந்த பொலிஸார், அங்கு சென்று விசாரணை நடத்தினர். சேதமடைந்த வலைக்கு நஷ்டஈடு கொடுப் பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து சிறைப் பிடிக்கப்பட்ட மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.



தமிழகத்துக்கு 3 நாட்கள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி நேற்றுமுன்தினம் நெல்லை, பாளையங்கோட்டைக்கு வந்தபோது வழிநெடுக நின்ற மக்களைப் பார்த்ததும் காரை நிறுத்தி ஆர்வமுடன் ஓடி வந்தவர்களிடம் கைகுலுக்கியபோது......

# ராகுலின் தமிழக வருகையையொட்டி ஈழ அகதி முகாம்களில் விசாரணை

சேலம், செப். 10

தமிழகத்துக்கு ராகுல் காந்தியின் வருகையால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களில் தீவிர சோதனை நடந்து வருகிறது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் ராகுல்காந்தி, 3 நாட்கள் சுற்றுப் பயணமாக தமிழகம் வந்துள்ளார். இதையொட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கியூப் பிரிவுப் பொலிஸார் ரகசிய கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் 117 இடங்களில் இலங்கை அகதி முகாம்கள் இருக்கின்றன. இதில் 70 ஆயிரம் அகதிகள் உள்ளனர்.

இம்முகாம்களில், அடையாள அட்டை உள்ள அகதிகளைத் தவிர வேறு யாரும் ஊடுருவியுள்ளனரா என்று வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் கடந்த 2 நாட்களாகச் சோதனை நடத்தினர்.

இன்னும் 2 நாட்களுக்கு முகாம்களில் இருந்து அகதிகள் வெளியே செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் தம்மம்பட்டி, கோனேரிப்பட்டி, செந்தாரப்பட்டி, தாரமங்கலம், இரும்பாலை உட்பட 9 இடங்களில் உள்ள முகாம்களில் 3 ஆயிரம் அகதிகள் உள்ளனர். முகாம்களில் தங்கியுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எத்தனை பேர்?, பார்வையாளர்கள் யாராவது வந்துள்ளனரா என்று பொலிஸார் விசாரித்தனர்.

இதுபற்றி மண்டபம் ஐ.ஜி., கிறிஸ்டோபர் நெல்சனிடம் கேட்டபோது -

ராகுல் காந்தியின் வருகையையொட்டி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து அகதி முகாம்களிலும் தீவிர சோதனை நடத்தப்பட்டது. தொடர்ந்தும் அகதி முகாம்களைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம் - என்றார்.

# இலங்கையில் இருந்து இந்தியாவுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து மநாடு

## பிரதமர் மன்மோகன் தலைமையில் 21, 22 இல்



சென்னை, செப். 10

இலங்கை மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு ஏற்படுகின்ற பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் ஆராயவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் இந்தியப் பிரதமரின் தலைமையில் மாநாடொன்று புதுடில்லியில் இடம்பெறவுள்ளது.

இதில் இந்தியப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 24 இணைப்பணிப்பாளர்கள் மற்றும் பொலிஸ் துறை அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர். அத்துடன், இந்திய உள்துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சரும் இதில் பங்குபற்றவுள்ளனர்.

இதன்போது எல்லைப்புறப் பாதுகாப்பு துறை, மத்திய பாதுகாப்புத் துறை மற்றும் தேசிய பாதுகாப்புத் துறை ஆகியன தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவுள்ளன.

இதேவேளை, இரண்டாம் நாளான 22 ஆம் திகதி இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவான றோ அமைப்பின் தலைமையகத்திற்கு விஜயம் செய்யும் மாநாட்டின் பிரதிநிதிகள் அங்கு இலங்கையில் இருந்தும் பாகிஸ்தானில் இருந்தும் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து கலந்துரையாடவுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குண்டுப் புரளியால் டில்லியில் பரபரப்பு

டில்லி, செப். 10

டில்லியில் 2 வைத்தியசாலைகள் உட்பட 5 இடங்களில் குண்டு வைக்கப்பட்டுள்ளது என மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து டில்லியில் பதற்றம் ஏற்பட்டது.

பொலிஸார் நடத்திய சோதனையில் இந்த மிரட்டல் வெறும் புரளி என்று தெரிய வந்தது. டில்லி பொலிஸ் கட்டுப்பாடு அறைக்கு நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு இனத்தெரியாத ஒருவர் தொலைபேசியில் பேசினார். சில வினாடிகள் கழித்து மீண்டும் ஒருவர் தொலைபேசியில் பேசினான்.

அப்போது, டில்லி ராம் மனோகர் லோகியா வைத்தியசாலை கன்னாட் பிளேஸ் பகுதியில் உள்ள பலிகா கேந்திரா, டில்லி ரயில் நிலையம், ஐ.டி.ஓ. பகுதியில் உள்ள விகாஸ் மினார், என்.எம்.டி.சி. கட்டடம் மற்றும் சப்தர்ஜங் வைத்தியசாலை ஆகிய 5 இடங்களில் குண்டு வைக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவித்து விட்டு உடனடியாக தொலைபேசி இணைப்பைத் துண்டித்து விட்டார்.

இதனால் பரபரப்பு அடைந்த பொலிஸார் உடனடியாக மோப்ப நாய்கள், வெடிகுண்டுகளை செயலிழக்க செய்யும் நிபுணர்கள், தீ அணைக்கும் படையினர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் அந்த 5 இடங்களுக்கும் விரைந்து சென்றனர்.

சப்தர்ஜங் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் அனைவரும் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதனால் மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டது. 2 வைத்தியசாலைகளிலும் 3 பொது இடங்களிலும் மோப்ப நாய்கள், வெடிகுண்டு நிபுணர்களுடன் பொலிஸார் சோதனை நடத்தினர். 2 மணி நேரம் நடந்த சோதனையில் எந்த இடத்திலும் வெடிகுண்டு எதுவும் கிடைக்கவில்லை. இதையடுத்து, இது வெடிகுண்டு புரளி என்று உறுதி செய்யப்பட்டது. வெடிகுண்டு புரளியை கிளப்பிய சமூக விரோதியைப் பிடிக்க பொலிஸார் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

# சட்டவிரோதமாகப் பிரான்ஸ் செல்ல முயன்ற 6 யாழ்ப்பாணத் தமிழர் ஐதராபாத்தில் கைது

சென்னை, செப். 10

சட்டவிரோதமான முறையில் பிரான்ஸிற்கு செல்ல முற்பட்ட ஆறு இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலிக் கடவுச் சீட்டு மற்றும் போலி விஸாக்களைப் பயன்படுத்தி குறித்த இலங்கைத் தமிழர்கள் பிரான்ஸ் செல்ல முற்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐதராபாத் விமான நிலையத்தில் வைத்து குறித்த இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. இலங்கையிலிருந்து தமிழகத்திற்குச் சென்று போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து பிரான்ஸ் செல்ல விஸா பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வைகோ மீது தமிழக அரசு வழக்கு!

சென்னை, செப். 10

முதல்வர் கருணாநிதியின் நன்மதிப்பை பாதிக்கும் வகையில் பேசினார் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மீது தமிழக அரசு அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளது.

சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கம், சினிமா இயக்குநர்கள் பாரதி ராஜா, சீமான் உட்பட பலர் பேசினார்கள். இந்தக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வைகோ பேசினார்.

சினிமா இயக்குநர் பாரதிராஜாவின் அலுவலகத்தை அடித்து நொறுக்கியதற்கு ஏற்பாடு செய்தவரே முதல்வர்தான் என்று வைகோ பேசினார் என கடந்த மாதம் 31 ஆம் திகதி பத்திரிகையில் செய்தி வெளியானது.



வைகோ பேசிய இந்தப் பேச்சு முதல்வர் கருணாநிதியின் நன்மதிப்பைப் பாதிக்கும் வகையில் உள்ளது என்று தமிழக அரசு சார்பில் சென்னை மாநகர அரச சட்டத்தரணி ஷாஜகான் அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அவர் சென்னை நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -


முதல்வர் கருணாநிதி 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுவாழ்வில் உள்ளார். 5 ஆவது முறையாக முதல்வராகப் பணிபுரிந்து வருகிறார். சிறந்த நிர்வாகியாகவும், சமூக சேவகராகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் உழைத்து வருகிறார்.

பொதுமக்களிடத்தில் அவருக்கு நல்ல மதிப்புள்ளது. ஆனால், வைகோவின் பேச்சானது உண்மைக்குப் புறம்பானதாகவும், முதல்வரின் நன்மதிப்பைப் பாதிக்கும் வகையிலும் உள்ளது. ஆகவே, இந்திய தண்டனை சட்டம் 499 மற்றும் 500 ஆவது பிரிவின் கீழ் வைகோவைத் தண்டிக்க வேண்டும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் யாழ்ப்பாணத்துக்கான விற்பனை நிலையம், யாழ். பிர தான வீதியில் அமைந்துள்ள சென். மார்ட்டின் ரேட் சென்ரர் கட்டடத்தில் நேற்று திறந்துவைக் கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிறுவன ஊழியர்கள் பால்காய்ச்சி சம்பிர தாய பூர்வமாக அலுவலக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதையும்-

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் யாழ். மாவட்ட முகாமையாளர் ஸ்ரேவஸ் உரையாற்று வதையும்,

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மோட்டார் சைக் கிளைக் கொள்வனவு செய்ததற்கானபற்றுச்சீட் டினை நிறுவனத்தின் முகாமையாளர் வழங்கு வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- ஒங்காரன், லக்ஸ்மன்)

# வன்னி மீள்குடியமர்வு தொடர்பான வாக்குறுதியை மழை காலத்துக்கு முன்னர் நிறைவேற்றுங்கள்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, செப்.10

வவுனியா அகதிமுகாம்களில் உள்ள வன்னி மக்கள் விரைவில் மீள்குடிமர்த்தப் படுவர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதி, மழை காலத்திற்கு முன் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நேற்று நாடாளு மன்றில் அரசிடம் வேண்டுகோள் விடுத்தது.

வன்னி மக்களின் 99 வீதமான வாக்கு க்ளைப் பெற்ற கூட்டமைப்பு, வவுனி யாவுக்குச் சென்று அம்மக்களைப் பார்த்து அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுப்பதற்கு ஜனாதிபதி ஏற்பாடு களைச் செய்து தரவேண்டும் என்றும் தமிழ்க் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்தது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற தேச நிர்மாண அமைச்சுக்கான குறைநிரப் புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பியான அரியநேத்திரனே இந்த வேண்டுகோளை விடுத்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வன்னி மக்களின் நிலைமை தொடர் பாக இங்குள்ள பல அரசியல் கட்சிகள் சுட் டிக்காட்டின. அது அக்கட்சிகளின் கடமை.

வன்னி மக்களின் 99 வீதமான வாக்கு களைப் பெற்ற ஒரே கட்சியென்றால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் தான். தற்போது அகதி முகாம்களில் துன் பப்படும் மக்களைப் பார்வையிட்டு அவர் களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்கும் பொறுப்பு எமக்குண்டு. இதற் கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்து தர வேண்டும்.

ஜனாதிபதிக்கும் எமக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது அகதி முகாம்களில் உள்ள மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவர் என்று எம்மிடம் அவர் வாக்குறுதியளித்தார். அதை மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன் நிறைவேற்ற வேண்டும்.

இதுபோல கிழக்கின் மட்டக்களப்புப் பகுதியில் யுத்தகாலத்தின் போது சொந்த இடங்களை விட்டு வெளியேறியவர் களும் மீள்குடியமர்த்தப்படல் வேண்டும். முக்கியமாக இடம்பெயர்ந்தவர் அவரவர் சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்த் தப்பட வேண்டும்.

ஆனால், அந்தப் பகுதியில் மீள்குடிய மர்த்தல் என்ற பெயரில் சிங்களவர்களும் குடியமர்த்தப்படுகின்றனர். ஏற்கனவே அங்கு குடியிருந்து இடம்பெயர்ந்த சிங்கள வர்கள் என்றால் அத்தகையோரைக் குடி யேற்றுவதில் தவறில்லை. ஆனால், புதி தாக அவர்கள் குடியமர்த்தப்படும்போது அங்கு இன முறுகல் ஏற்படுவதற்கு இடமுண்டு.

வாகரை, கிரான், பட்டிப்பளை மற்றும் வாழைச்சேனை போன்ற இடங்களில் இவ் வாறான குடியேற்றங்கள் இடம்பெறுகின் றன என்று எமக்குத் தகவல் கிடைத்துள் ளது - என்றார்.

# வடமாகாண உயர் நிர்வாக அதிகாரிகள் மாற்றம்; மூன்று புதிய செயலாளர்கள் நியமனம்

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் விசேட பணிப்புரையின் பேரில் உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண அமைச்சிலும் ஆளுநர் அலுவலகத்திலும் உயர் நிர்வாக அதிகாரிகள் மட்டத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று நம்பகரமாக அறியப்படுகின்றது.

புதிய மாற்றங்களின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா ஆளுநரின் செயலாளராகவும், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் கிளி நொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதி பருமான தி.இராசநாயகம் வடக்கு மாகாண பொது நிர்வாகத் துணைச் செயலாளராக வும், ஆளுநரின் செயலாளராகக் கடமையாற் றிய திருமதி ரமேஸ் விஜயலக்சுமி வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாள ராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உத்தியோகபூர்வ நிய மனக் கடிதங்கள் இவ்வார இறுதியில் ஆளுநரால் வழங்கப்படவுள்ளன- எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-04-302)

# ஊடக வியலாளர் கைதானதைக் கண்டித்து கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப். 10

ஜே.வி.பியின் 'லங்கா' வாரஇதழ் பத்திரிகையின் மூன்று ஊடகவியலாளர் கள் கைது செய்யப்பட்டமையைக் கண் டித்து கொழும்பில் நேற்றுப் பிற்பகல் ஆர்ப் பாட்டம் ஒன்று நடத்தப் பட்டது.

கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம் பித்த இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

அரசையும் பாது காப்புத் தரப்பின ரையும் கண்டிக்கும் பதாகைகளைத் தாங் கியவாறு கோஷங் களை எழுப்பிய ஆர்ப் பாட்டக் காரர் கள் வீதிக்குக் குறுக்காக நின்று வாகனங் களையும் வழிமறித்துச் சத்தமிட்டனர்.

இதனால் ஒழுங்கை நிலைநாட்டப் பொலிஸார் பெரும் சிரமங்களை எதிர்நோக் கினர். ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் களும் ஆதரவாளர்களும் பெரும் எண்ணிக் கையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஊடக ஜனநாயகம் அழிக்கப்பட்டு விட்டதாகவும் சர்வாதிகார ஆட்சி நிலவுவ தாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 'லங்கா' பத்திரிகையின் ஆசிரியர் கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுதந்திர ஊடக இயக்கம் உட்பட ஏனைய ஊடக அமைப் புகள் எவையும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# 'யுனிசெவ்' அதிகாரியை வெளியேற்றும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலி ஆதரவுச் செயற்பாடுகளை மேற்கொண்டார் என்று குற்றஞ் சாட்டியே இலங்கை அரசு 'யுனிசெவ்' அமைப்பின் இலங்கைக் கான பேச்சாளர் ஜேம்ஸ் எல்டெரின் விசாவை ரத்துச்செய்து அவரை நாட்டைவிட்டு வெளியேற்றுகின்றது எனக் கூறப்பட்டது.

அத்துடன் ஜேம்ஸ் எல்டெர் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக இலங்கையை விட்டு வெளியேறிச் செல்லவேண்டும் என்றும் இலங்கை அரசு கண்டிப்பான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள் ளது. இந்த முடிவில் மாற்றம் கிடையாது என்று இலங்கை அரசு திட்டவட்டமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்த நிலையி லேயே ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், 'யுனிசெவ்' பேச்சாளர் ஜேம்ஸ் எல் டெரை இலங்கையை விட்டு வெளியேற்ற இலங்கை தீர்மானித்துள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றார் என்று ஐ.நா.பேச்சாளர் பக்ஸன் ஹக் ஊடகவிய லாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

### அரசின் நடவடிக்கைகள் குறித்து ஐ.நா.திருப்தி

அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபை யால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தாம் திருப்தி யடைந்துள்ளார் எனவும் இலங்கையில் பாரியளவிலான மனிதாபிமானப் பிரச்சினை களைத் தடுப்பதற்கும், மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கும் ஐ.நா. தொடர்ந்தும் குரல் கொடுக்கும் எனவும் ஐ.நா. செயலா ளர் நாயகம் தெரிவித்துள்ளார் எனவும் ஐ.நா. பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு ஐ.நா. பாரபட்ச மற்ற முறையில் செயற்படுகிறது என்றும் ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்துள் ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜேம்ஸ் எல்டெரை இலங்கையை விட்டு வெளியேற்ற இலங்கை அரசு தீர் மானித்துள்ளமை குறித்து இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விரைவில் ஐ.நா.செயலர் விளக் கம் கோரு வார் என்றும் ஐ.நா.பேச்சாளர் ஹக் ஊடகவிய லாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடந்த மே மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இந்த விஜயத்தைத் தொடர்ந்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தமது எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

அந்தக் கூட்டறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் குறிப்பிடப் பட்டி ருக்கும் விடயங்களை நடைமுறைப் படுத்தவேண்டுமென்றும் ஐ.நா. செய லாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதி [illegible] திறது. (அ-சி)


## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் தவமணி (மணி)

[முன்னாள் சாரதி குமுதினிப்படகு - வீதி அபிவிருத்தி அதிகாரசபை]

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தவமணி (07.09.2009) திங்கட் கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.09.2009) வியா ழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் பப்பரவன் சல்லி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்
குடும்பத்தினர்



## நல்லடக்க தினம் மாற்றம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட மோசேஸ் சிங்கராஜர் (செல்லத்துரை - முறிவு, நெறிவு வைத்தியர்) நேற்று முன்தினம் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை கள் நாளைமறுதினம் (12.09.2009) சனிக்கிழமை காலை 10 மணிக்குச் செப மாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரது நல்லடக்கம் இன்று வியாழக்கிழமை நடை பெறுமென நேற்றைய உதயனில் அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களினால் நல்லடக்கதினம் மாற்றப் பட்டுள்ளது. நல்லடக்கதின மாற்றம் பற்றிய தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளாவெளி வீதி, பெரியவிளான்,
இளவாலை.

(88743)

தகவல்,
சி. றமேஸ் (மகன்)



இன்னும் 3 நாட்களே உள்ளன. விரையுங்கள் !

Mega

கொம்ப்யூட்டர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை

13.09.2009 (ஞாயிறு)

இலவச அனுமதிகளை

ASIAN COMPUTERS

யாழ்நகர், நெல்லியடி பயிற்சி நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.



## ஓராண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் உயிர்ப்பு
06 ★ 04 ★ 1988

ஆண்டவன் அழிப்பு
10 ★ 09 ★ 2008

### சிவராமலிங்கம் நந்தாஜினி (நந்தா)

பெற்றோம், பொரிட்டோம்
உன்னை வளர்த்தோம்
இடையில் இழந்தோம்
கண்ணீர் சொரிகிறோம்.
பூச் சூடுகின்றோம் கண்ணே
உன் புன்னகை முகத்தின் ஒளி வீசிட
ஓராண்டு ஓடியது என் செல்வமே
உன் நினைவும் என்றென்றும்
மாறாது எம் மனதில்.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி......ஓம் சாந்தி......ஓம் சாந்தி......

கைதடி வடக்கு,
கைதடி.

(88736)

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி அகதிகளின் விவகாரம் பெரும் தேசியப் பிரச்சினையாகும்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சொல்கிறார்

யுத்த காலப்பகுதியில் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் பல துன்பங்களை இன்று வரை அனுபவித்து வருகின்றனர். அவர் களை விடுவிக்க அரசு உடனடியாக நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த விவகாரம் ஒரு தேசிய ரீதியான பிரச்சினை. அதே வேளை இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க உடனடியாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசு அமுல்படுத்த வேண்டும்.

இவ்வாறு நலன்புரிநிலையங்களிலுள்ள மக்களை விடுவிக்கக் கோரி கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்றைய காலகட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்தே காணப்படுகின்றன. ஆனால், அதற்கீடாகச் சம்பள உயர்வுகள் வழங்கப்படுவதில்லை.

இந்த வகையில் தோட்டத் தொழிலாளர்கள் கேட்கும் 500 நாளாந்த சம்பளம் நியாயமானது. குறைந்த பட்சம் 15 ஆயிரம் ரூபாவையாவது அடிப்படைச் சம்பளமாக அரச, தனியார்துறை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.

இன்று பலர் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். அண்மையில் கூட ஊடகவியலாளர் திஸநாயகம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, அவருக்குக் கடூழியச் சிறையும் வழங்கப்பட்டிருக்கின்றது.

அவர் ஓர் ஊடகவியலாளர். ஊடகவியலாளர் ஒருவருக்குத் தனது கருத்தையும், உண்மை நிலையை எடுத்துக் கூறும் உரிமையும் உள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பலர் இன்று பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். எனவே அச்சட்டத்தை அரசு உடனடியாக நீக்க வேண்டும் - என்றார்.

# ஜனாதிபதியின் ஆலோசகர்களுக்கு கடந்த வருடத்தில் 1,17,29,653 ரூபா மொத்தக் கொடுப்பனவு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 38 ஆலோசகர்கள். அவர்களில் 22பேருக்கு கடந்தவருடத்தில் ஒருகோடி 17லட்சத்து 29 ஆயிரத்து 653 ரூபா 36சதம் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த விவரத்தை அரசாங்கத்தின் பிரதம கொறடாவும், அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனா நேற்று நாடாளுமன்றில் வெளியிட்டார். ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணவீர பத்திரண கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

ஜனாதிபதியின் ஆலோசகர்களில் 16 பேர் வேதனம் எதனையும் பெறுவதில்லை. அத்துடன் சம்பளம் பெறுவோரின் தொகை 60 ஆயிரம் ரூபா, 40 ஆயிரம் ரூபா, 30அயிரம் ரூபா என்று வேறுபடுகிறது. ஆனால் கொடுப்பனவு எதனையும் பெற்றுக் கொள்ளாத பலர் அரசாங்க வாகனங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கான விமானக் கட்டணங்களையும் பெறுகிறார்கள் என்று ஜே.வி.பி எம்.பி சுட்டிக்காட்டினார். அதற்கு ஜனாதிபதியின் ஆலோசகர்கள் எவருக்கும் இலவசமாக பயண அனுமதி வழங்கப்படுவதில்லை என்று தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார்.

அதேவேளை ரணவீர பத்திரண பின்வரும்விடயத்தையும் சுட்டிக்காட்டினார்: ஜனாதிபதி ஆலோசகர்கள் சிலர் அரசாங்க அமைச்சர்களைவிடவும் தாங்கள் அதிகாரமுள்ளவர்கள் போல நடந்து கொள்கிறார்கள். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் எனக்கு தெரிவித்த தகவல்களை வைத்துக்கொண்டே நான் சபையில் இதனை எடுத்துக்கூறுகின்றேன்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றை டக்ளஸ் தேவானந்தா, ரிஷாத் பதியுதீன் ஆகிய அமைச்சர்கள் செய்வதற்குஜனாதிபதியின் ஆலோசகர்கள்சிலர்இடம் கொடுப்பதில்லையாம் - என்றார். (அ-07)

### அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பார்வையிடுவார்.

மாலை 5.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் அதிகாரப்பகிர்வு: இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

நாளை காலை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப வள நிலையத்தைத் திறந்து வைப்பார். (அ-1)


2011 A/L
English Medium
(Sat,Sun)
Phy. :
Mr.Karunanithy (9a.m)
Che :.
Mr. Vaheesan (10a.m)
C.Ma:
Mr. Sajanthan (8a.m)
Bio :
Mr. Kugananthan (8a.m)
12/09/2009 (sat)
2009 A/L (Repeat)
2010 A/L (Paper),
2011 (A/L)
தமிழ் திரு.சந்திரலிங்கம்
sat,sun - 10 (am) 12.09.2009
New Education World
ஆனைப்பந்தி (சுந்தரர் அருகில்)

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
பொருளியல்
திரு.B.கஜீதரன்
A/L 2010
*பயிற்சி வகுப்புக்கள்
*PAPER CLASS
ஆரம்பம்.
Sat / sun 8.00 -9.00
A/L 2011
Sat / Sun 12.00

புதிய பிரிவு ஆரம்பம் Diploma in Web Development
Special offer
மாறிவரும் உலகில் இணையம் இன்றியமையாதது!
உங்கள் இணையத் தளங்களை நீங்களே வடிவமைக்க முழுமையான பயிற்சி
CIW சர்வதேசதர சான்றிதழ்
இலவச இணையத்தள பதிவு
MCS விபரங்களுக்கு நேரில் பதிவுகள் 14.09.2009ற்கு முன்
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில்,
Supported By UNDP/JRRP யாழ்ப்பாணம், Bus Route - 764 Phone: 0772-395 895

தேவை
யாழ்.நகரில் இயங்கும் உல்லாசப் பயணிகள் விடுதிக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
* சமையல்காரர் (ஆண்/ பெண்)
* Room Boys (ஆண்/ பெண்)
* உல்லாச விடுதி கல்வி பயின்ற or அனுபவம் உள்ள 35 வயதுக்குட்பட்ட முகாமையாளர்.
* கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
இன்று (10.09.2009) வியாழக்கிழமை 2 மணிக்குப் பின் நேரில் வருகை தரவும்.
LUX. ETOILES
No.34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.


# வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது பகுதிகளைப் பார்வையிட அனுமதிக்குக!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. கோரிக்கை

கொழும்பு, செப். 10

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களது பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுக்கோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் குறைநிரப்புப் பிரேரணையின் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தற்போது இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றங்களின்போது அந்தப் பிரதேசங்களில் ஏற்கனவே வசிக்காத சிலரும் மீள்குடியேற்றப்படுகின்றனர் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

சம்மாந்துறை வலக்காப்பட்டியவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்லும்போது சிங்களவர்களாலும் ஊர்காவல் படையினராலும் விரட்டி அடிக்கப்படுகின்றனர்.

இந்த நிலை நாட்டில் நீடிக்குமானால் மீண்டுமொரு இனக்கலவரம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும். அத்துடன், பருவமழைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துமாறு ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது. அந்த மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவர் என நாங்கள் நம்புகின்றோம்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஆயிரத்து 500 பேர் மேற்கொண்ட கவனயீர்ப்புப் போராட்டத்திற்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார்.

### வவுனியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விவரங்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

முதலில் கிடைத்த கேட்கப்பட்டிருந்த தகவல்களின் அடிப்படையில் 6,833 பேர் வவுனியாவில் இருந்து நாளை அழைத்து வரப்படவுள்ளனர்.

இவர்களை அழைத்துவருவதற்காக யாழ்.செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ச.சுதர்சன் தலைமையிலான குழுவினர் வவுனியா சென்றுள்ளனர்.

அவர்கள் அழைத்துவரும் மக்கள் பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மூலம் உறவினர்களிடம் சேர்க்கப்படுவர். (அ-1)

### வன்னி மக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு இடம்பெயர்ந்த மக்களின் அவல நிலைமைகளை வெளிப்படுத்தினர்.

அரசு உரிய முறையில் நிவாரணங்களை வழங்கவில்லை எனவும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சர்வதேச தொண்டு நிறுவனப் பணியாளர்களையும் அங்கு செல்ல அரசு அனுமதிப்பது இல்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர் கோஷங்களை எழுப்பினர்.

குறிப்பாக முகாமிலிருந்து காணமற்போனதாகக் கூறப்படும் 10 ஆயிரம் பேரின் நிலைமை என்ன? என்பது குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கேள்வி எழுப்பினர். பாதுகாப்புத் தரப்பினரே இதற்குக் காரணம் எனவும் குற்றம் சாட்டி கோஷமிட்டனர்.

முகாமில் உள்ள மக்களின் அவல நிலைமைகளை வெளிப்படுத்தும் சுலோக அட்டைகள், பாதாதைகள் போன்றவற்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இடம்பெயர்ந்த மக்களின் அவல நிலைமைகளை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பில் முதன் முதலாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை விலைவாசி உயர்வு மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபா சம்பள உயர்வு வழங்க மறுக்கின்றமை குறித்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் கோட்டை ரயில் நிலையப் பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து உரை நிகழ்த்தினார்.

(அ-சி)

# தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்துக்கு முஸ்தீபு

கொழும்பு, செப். 10

களுத்துறை, வெலிக்கடை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அறிவித்துள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமை சட்டத்தரணிகள் வழங்கிய உறுதி மொழிகளின் பிரகாரமே ஏற்கனவே நடத்திய உண்ணாவிரதப் போராட்டங்களைத் தாம் கைவிட்டனர் என்றும், ஆனாலும் தமது விடுதலைக்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை என்றும் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர தங்களுக்கு வேறு வழி ஏதும் தெரியவில்லை என்று கைதிகள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிரதம் இருப்பது தொடர்பாக கைதிகள் தமது சட்டத்தரணிகள் மூலமாக உறவினர்களுக்கும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

### முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரசஅதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்படும் மக்களின் தங்குமிட வசதிகளை அரசஅதிபர்கள் செய்து கொடுப்பர். அதன்போது சம்பந்தப்பட்ட மக்கள் முன்னர் குடியிருந்த வீடுகளும் பயன்படுத்தப்படும்.

இவர்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அவர்கள் சொந்தத் தொழில்களை ஆரம்பிக்கும் வரைக்கும் சுமார் ஆறு மாதங்களுக்கு உலர் உணவு நிவாரணங்கள் வழங்கப்படும். (அ-7)

### கண்ணிவெடிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர் 66 லட்சம் டொலர்களை அமெரிக்கா வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ-சி)


திரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்
A/L 2010
பொருளியல்
வினாவிடை
வகுப்புக்கள்
(அலகு ரீதியான மீட்டல்)
ஆசிரியர் திரு. சன்
ஆரம்பம்:10.09.09
3.15 - 4.30

G.A.Q.,B.A. (வெளிவாரி)
யாழ்., பேராதனை
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
தமிழ் திரு.S.R. ஜீவானந்தன்
B.A (Final) -12.00
புதிய பிரிவு - 11.00
மெய்யியல்
திரு .N.உதயகுமார் 8am
அரசறிவியல்
திரு.S. இளங்கோ - 7am
ஆரம்பம் 12.09.2009 (sat)
New Education World
ஆனைப்பந்தி (சுந்தரர் அருகில்).

* கிற் * மொபிரெல் * SLT நெற் * SLT பாஸ்போர்ட் * SLT citylink
* லங்காபெல் * வீசா IDD
அஸ்வினி மஸ்ரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

இன்று முதல் விற்பனையில்
தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு மாதாந்த வெளியீடாக வினாத்தாள்கள் விடையுடன் வெளி வந்துள்ளன.
6 பாடங்களை உள்ளடக்கியது. விசேடமாக சிங்களப் பாடம் இணைக்கப்பட்டுள்ளது.
யாழ்.நகரில் விடையுடன் வெளியாகும் ஒரே வினாத்தாள்
வெளியீடு:- அஸ்ரன் பரீட்சை
வெளியீட்டுப் பிரிவு - யாழ்ப்பாணம் 021 222 4031
கிடைக்கும் இடங்கள் :-
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்
அன்னை புத்தகசாலை - யாழ்
மொடேன் ஸ்ரோஸ் - நெல்லியடி
[illegible]


## மரண அறிவித்தல்

### கனகரட்ணம் ஆதித்தன்

வண்ணார்பண்ணை சிவலிங்கப் புளியடியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ஆதித்தன் நேற்றுப் புதன்கிழமை (09.09.2009) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம்-சரஸ்வதி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற இராஜக்கோன் - தெய்வநாயகி ஆகியோரின் மருமகனும், மனோன்மணியின் பாசமிகு கணவனும் கமலாதேவி (வவுனியா), காலஞ்சென்ற தேவரஞ்சினி, யோகநாயகி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2009) வியாழக்கிழமை பி.ப 3மணியளவில் அச்சுவேலியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
மனைவி.

(A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.